Registered as a news paper.
இலவசப் பிரதி
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



ஒறிஜினல் கோலம் சாறி, பட்டு வேட்டிகள், கோலம் கூறை சாறிகள், பட்டு வேட்டி வகைகள் மற்றும் றெடிமெட் ஆடைகள், பல்வேறு ரக துணி வகைகள், பிளவுஸ் துணி வகைகள் யாவற்றுக்கும் வருகை தாருங்கள்

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
41, பெரிய கடை,
யாழ்ப்பாணம். (சி-652)
T.P.No. 222 2063

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 27 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 07 (11.03.2003) செவ்வாய்க்கிழமை இதழ் :159

# புலிகளின் வர்த்தகக் கப்பலை கடற்படை தாக்கி மூழ்கடித்தது!

## தாக்குதல் நடாத்தியது இந்தியத் தயாரிப்பு கப்பல்



திருமலைத் துறைமுகத்தில் சயூரா P 620

நேற்றுக்காலை புலிகளின் வர்த்தகக் கப்பல் மீதான தாக்குதலை நடத்தியது, 'சயூரா P 620 ' என்ற பீரங்கிக் கப்பல் எனத் தெரியவருகிறது. இந்தியாவிலிருந்து சில மாதங்களுக்கு முன்பே இத்தாக்குதல் கப்பல் இலங்கைக் கடற்படைக்கெனக் கொள்வனவு செய்யப்பட்டது. இது 22 வருட பழமைவாய்ந்த கப்பலாகும்.

அண்மையில் 'பலன்ஸ் ஸ்ரைல்' என்ற அமெரிக்க - இலங்கை கூட்டு இராணுவப் பயிற்சியில், சயூரா என்ற இந்தத் தாக்குதல் கப்பலும் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது. சில தினங்களுக்கு முன்பே இக்கப்பல் கொழும்பிலிருந்து புறப்பட்டு திருமலை சென்றிருந்தது.

## கப்பலின் மீதான தாக்குதலை புலிகள் தீவிரமாகவே பார்க்கின்றனர்

### கண்காணிப்புக்குழுப் பிரதித் தலைவர்

(கொழும்பு)

தமது வர்த்தகக் கப்பலொன்று சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து அழிக்கப்பட்டது தொடர்பாக, விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் மிகமிக தீவிரத்துடனும், கவலையுடனும் நோக்குகின்றது என அவர்கள் தனக்கு அறிவித்துள்ளதாகக் கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் தெரிவித்துள்ளார்.

தாக்கப்பட்ட கப்பல் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து அழிக்கப்பட்டுள்ளது என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். 200 அடி நீளமான இக்கப்பலில் பதிவு அடையாளமோ, கொடியோ இருக்கவில்லை. நிறுத்த உத்தரவிட்டும் நிற்கவில்லை எனக் கடற்படையினர் கூறியுள்ளனர். சம்பவம் சர்வதேசக் கடற்பரப்பில் நடந்ததால் இதுபற்றி தற்போது எதுவும் கூற முடியாது எனவும் ஹொக்லண்ட் குறிப்பிட்டுள்ளார்.

## சர்வதேச கடற்பரப்பில் நேற்று அத்துமீறல்; கப்டன் உட்பட 11 போராளிகள் உயிரிழப்பு!

**திருகோணமலையிலிருந்து 220 கடல் மைல் தொலைவில் - சர்வதேச கடற்பரப்பில் வைத்து நேற்றுக்காலை 10 மணியளவில் விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் மீது, கடற்படையின் பீரங்கிப்படகொன்று நடத்திய தாக்குதலில் வர்த்தகக் கப்பல் தீப்பற்றிக் கடலில் மூழ்கியது. இச்சம்பவத்தில் விடுதலைப் புலிகளைச் சேர்ந்த, கப்பலின் கப்டன் உட்பட பதினொரு போராளிகள் உயிரிழந்தனர்.**

## யுத்த நிறுத்த உடன்படிக்கையை அப்பட்டமாகவே மீறும் செயல்!

### விடுதலைப் புலிகள் கடும் கண்டனம்

சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து புலிகளின் வணிகக் கப்பல் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியமை, யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறும் செயலாகுமென, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு தமது கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்துக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

நேற்று நடைபெற்ற இந்த அசம்பாவிதம், இலங்கைக் கடற்படையினரின் அதிகாரத்துக்குட்படாத சர்வதேசக் கடற்பரப்பில் நடந்துள்ளது. இது யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயலாகும். எமது கப்பல் எந்த விதமான சட்டவிரோத நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவத்தின் ஆரம்பத்திலேயே நாம் இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தோம். சம்பவம் நடைபெற்றுள்ள இடம் இலங்கைக் கடற்பரப்புக்கு அப்பாற்பட்ட பிரதேசம். அத்துடன், எந்தவிதமான அசம்பாவி

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



அமைதியை அழிக்கிறதில உவக்கேன் இத்தனை சந்தோசம்...!

## களுத்துறை கைதிகளுக்கு ஆதரவாக யாழ்.செயலகம் முன்பாக நேற்று மறியல்



(கொழும்புத்துறை)

களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தினை மேற்கொண்டு வரும் தமிழ்க்கைதிகளை விடுதலை செய்யக்கோரி, நேற்று யாழ். அரச செயலகம் முன்பாகவுள்ள பிரதான வீதியில் மறியற் போராட்டம் நடத்தப்பட்டது.

தமிழர் தேசியக் கூட்டமைப்பும் யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியமும் இணைந்து இப் போராட்டத்தினை நடத்தின.

இதில் தமிழர் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, என். ரவிராஜ், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, எம்.கே.சிவாஜிலிங்கம்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கப்பலை அழிக்க ஜனாதிபதியே உத்தரவிட்டார்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் படகை அழிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகாவே கடற்படையினருக்கு அவசரமாக உத்தரவு பிறப்பித்தார். இத்தகவலை அவரின் சகாவும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தருமான மங்கள சமரவீர நேற்று வெளியிட்டார்.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும், அவரின் செயலர் ஒஸ்ரின் பெர்ணான்டோவும் இவ்விடயத்தில் மௌனமாக இருந்த சமயத்தில், முப்படைத் தளபதி என்ற வகையில் புலிகளின் படகை உடனடியாக அழித்து விடும்படி, ஜனாதிபதி கடற்படைக்கு உத்தரவிட்டார் என மங்கள சமரவீர தெரிவித்தார்.

இதேசமயம் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த கடற்படை -

புலிகளின் கப்பல் தொடர்பாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை பற்றி பிரதமருடனும், பாதுகாப்பு அமைச்சருடனும் தொடர்புகொண்டபோது, அவர்களிடமிருந்து எந்தவித பதிலும் வரவில்லை என்று குறிப்பிட்டுள்ளது. இதைத் தொடர்ந்தே தாம் ஜனாதிபதியிடம் தொடர்புகொண்டபோது அவர் படகைத் தாக்கி அழிக்கும்படி உத்தரவிட்டார் எனக் கடற்படையினர் மேலும் தெரிவித்தனர். (01,200)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.
(சி-626)

# அமிர்தாஞ்சன்




இதமான நிவாரணம் ஆண்டு முழுவதும்!

ஏக விநியோகஸ்தர்

**சிறிகாந் எசன்ஸ் & குறோசரிஸ்**

161, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

T.P. :021-2222219

(சி-669)


## சாவகச்சேரி வீடுகளிலிருந்து படையினர் வெளியேற்றம்!

(தென்மராட்சி)

சாவகச்சேரி, நுணாவில் பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர் அங்குள்ள வீடுகளிலிருந்து வெளியேறிவருகின்றனர்.

இதனால் அவ்வீடுகளில் உரிமையாளர்கள் குடியமர்ந்து வருகின்றனர். கடந்த 2001 ஆம் ஆண்டு நுணாவில் பகுதியில் பொதுமக்களின் 25 இற்கும் மேற்பட்ட வீடுகளில் இராணுவத்தினர் பாரிய முகாம்கள் அமைத்திருந்தனர். இதனால் மக்கள் மீளக் குடியமரமுடியாத நிலை ஏற்பட்டது.

தற்போது கைதடி, நுணாவில் பகுதியில் பாரிய முகாமொன்று அமைக்கப்பட்டு வருகின்றது. நுணாவில் சந்தியிலிருந்து அகற்றப்பட்டு வரும் பாரிய இராணுவ முகாமும் இப்புதிய இராணுவ முகாமிற்கு நகர்த்தப்பட்டு வருகின்றது.

இதனால் நுணாவில் சந்தியில் இருந்த 15 வீடுகளில் மக்கள் மீளவும் குடியமர்ந்து வருகின்றனர்.

ஆனாலும் அப்பகுதியில் உள்ள 3 வீடுகளில் இன்னமும் பொலிஸார் தங்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(34)

## கட்டடக் கலைஞர் தேர்விற்கான வழிகாட்டல் வகுப்புக்கள்

**மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் கட்டடக் கலை கற்பதற்கு விண்ணப்பித்த மாணவர்களை நுழைவுத் தேர்வுக்கு தயார்படுத்துவதற்கான வழிகாட்டல் வகுப்புக்கள் Mouse நிறுவனத்தில் நடைபெற உள்ளது.**

**விண்ணப்பித்த மாணவர்கள் 14.03.2003 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நேரில் வரவும்.**

கு. பதீதரன் (குரு)
*கட்டடக்கலைஞர்*

Mouse
K.K.S. வீதி, இணுவில்.

(274)


## ஐரோப்பிய நாட்டில் உயர்கல்வி

**இந்த அரிய வாய்ப்பு - இன்னும் இருவருக்கு மட்டுமே. மேற்படி நாட்டில் கல்வி கற்பதற்கான பயண ஒழுங்குகள் செய்து தரப்படும். உடனடியாக தொடர்பு கொள்ளவும்.**

**தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்: 01-382960, 066-33783.**

(சி-668)


## துயர் பகிர்கின்றோம்

எமது பீட மூன்றாம் வருட மாணவன் அஜீவனின் அன்பு மனைவி

**வினோதினி அஜீவன்**

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆறாத்துயரும் அடையும் அதேவேளை அன்னாரை இழந்து தவிக்கும் அவரின் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

*விவசாயபீடம்,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

முதலாம் வருட
மாணவர்கள்

(276)


# ராஜா

யாழ்ப்பாணம்.

அஜித், சிம்ரன், கவுண்டமணி, செந்தில் நடித்த

**அவள் வருவாளா**

நேரம்:- 10.30, 2.30, 6.30 மட்டும்

**U. 571**

இரவு 9.30. மட்டும் 10-13 வரை.

(சி-628)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

விஜயகாந், மீனா நடித்த

**தேவன்**

வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி

**U 571**

அதிரடித் தாக்குதல் நிறைந்த படம்.

(சி-627)


## பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

# பதவி வெற்றிடம்

| | |
|---|---|
| பதவி | : தட்டெழுத்தாளர் 305/15 |
| சம்பள அளவுத்திட்டம் | : 3500 - 65x10 - 70x10 - 4850 |
| தகைமை | : க.பொ.த(சா/தரம்) சான்றிதழ் தொடர்புபட்ட மொழி உட்பட 06 பாடங்களில் சித்தியும், தமிழ்/சிங்கள தட்டெழுத்து நிமிடத்திற்கு 20 சொற்கள் அல்லது ஆங்கிலத்தில் 30 சொற்கள். |

மேற்படி பதவிக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ்க்காணும் விபரங்களை உள்ளடக்கியதாக விண்ணப்பத்தினை சுயமாகத் தயாரித்து எதிர்வரும் 26.03.2003 இற்கு முன்னதாக பொதுமுகாமையாளர் பருத்தித்துறை, பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கிராமக்கோட்டடி, புலோலி எனும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ விண்ணப்பிக்கலாம்.

01. முழுப்பெயர்
02. முகவரி
03. பிறந்த திகதி
04. தேசிய அடையாள அட்டை இல.
05. கல்வித்தகைமை
06. அனுபவம்

மேற்குறித்த விபரங்களைக் கொண்டிராத விண்ணப்பங்களும் விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

சங்கத்தின் தொழிற்பரப்பிற்குட்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இவ்வண்ணம்,
கூட்டுறவுச்சேவையிலுள்ள,
பொதுமுகாமையாளர்.

(சி-670)


# உலகம் உங்கள் கரங்களில்




**டயலொக் Global**




## IDD அழைப்புக்கள் நிமிடத்திற்கு ரூ. 25/-

- எந்தவொரு தொலைபேசியிலிருந்தும் உலகின் எப்பகுதிக்கும் அழைப்பு எடுக்கலாம்.
- உடனடி இணைப்பு, நம்பமுடியாத தெளிவு!
- வினாடி அடிப்படையில் கட்டணம்!
- டயலொக் விற்பனை முகவர்கள், கடைகள் மற்றும் ஆர்கேடுகளில் ரூ. 500 இற்கு டயலொக் குளோபல் கணக்கு அட்டை ஒன்றை வாங்கலாம்.
- ரூ.400/- கிறெடிற் முன்கூட்டியே சேர்க்கப்பட்டுள்ளது.
- நீங்கள் பாவிக்கும் "கிற்" அல்லது "சரு" அட்டை மூலம் தொடர்புகொள்ளலாம்.

**நீங்கள் 77 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு அழைப்பு எடுக்கலாம்.**

நிமி./ ரூ.25/- : அன்டோரா, ஆர்ஜன்டினா, அவுஸ்திரேலியா, ஒஸ்திரியா, பெல்ஜியம், புருணை, கனடா, சிலி, குறோவேசியா, செக் குடியரசு, டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, கிரேக்கம், ஹொங்கொங், ஹங்கேரி, ஐஸ்லாந்து, இந்தோனேசியா, அயர்லாந்து, இத்தாலி, யப்பான், மலேசியா, மோல்டா, நெதர்லாந்து, நியூசிலாந்து, நோர்வே, பிலிப்பீன்ஸ், போலந்து, போர்த்துக்கல், ரஷ்யா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, தென்கொரியா, ஸ்பெயின், சுவீடன், சுவிற்சர்லாந்து, தாய்வான், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, சிம்பாப்வே.

நிமி./ ரூ.35/- : அல்பேனியா, அல்ஜீரியா, பங்களாதேஷ், பெர்மூடா, பொஸ்னியா, பொட்சுவானா, பிரேசில், பல்கேரியா, புருண், சைப்பிரஸ், எகிப்து, எஸ்தோனியா, கானா, இந்தியா, ஈரான், கசகஸ்தான், கென்யா, லத்வியா, லித்துவேனியா, மக்காவு, மெக்ஸிக்கோ, மொல்டோவா, நமீபியா, ரொமேனியா, தாய்லாந்து, துருக்கி, உகண்டா, உக்ரெய்ன்.

நிமி./ ரூ.50/- : குவைத், மடகஸ்கர், மொறீஷியஸ், மொராக்கோ, நைஜீரியா, பாகிஸ்தான், செனீகல், சவூதி அரேபியா, தன்சேனியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ்.

நிமி./ ரூ.60/- : பஹறெயின், கம்போடியா, வியட்னாம்.

(சி-671)

எந்தவொரு தொலைபேசி மூலமும் அழைக்கலாம்.

யாழ். மண்ணின் விநியோகத்தர்கள்

**DIAL LINKS**

இல. 204, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

தொ.இ.: 2225485

# அரசின் சமாதான முயற்சிகளை மக்கள் நிராகரிப்பு; அக்குரஸ்ஸ தேர்தல் முடிவு வெளிப்படுத்துகிறதாம்!

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் - தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மேற்கொண்டிருக்கும் சமாதான முயற்சிகளை மக்கள் நிராகரித்திருக்கின்றார்கள்.

அக்குரஸ்ஸ பிரதேச சபைக்கு நடத்தப்பட்ட தேர்தலில், சமாதான முயற்சிகளை எதிர்க்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி என்பன பெற்றுள்ள வெற்றியின் மூலம் இது நிரூபணமாகியிருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அக்குரஸ்ஸ தேர்தல் முடிவு வெளியானதன் பின்னர் செய்தியாளரிடம் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அக்குரஸ்ஸ தேர்தலில் பொ.ஐ.மு. மற்றும் ஜே.வி.பி என்பவற்றுக்கு 16 ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. இது - அமைதி முயற்சிகளுக்கு எதிரான கருத்துடைய, இந்தக் கட்சிகளின் நிலைப்பாடுகளுடன் மக்கள் இணைந்திருப்பதையே காட்டுகின்றது.

இந்த வெற்றி எதிர்க்கட்சிகளுக்கு உளவியல் ரீதியாகப் பெரிய பலமாக அமைந்திருப்பதாகவும், ஐ.தே.கட்சியையும், அதன் சமாதான முயற்சிகளையும் தோற்கடிக்கும் போராட்டங்கள் தொடரப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அச்சுவேலியில் வெங்காயம் அமோக விளைச்சல்

(அச்சுவேலி)

அச்சுவேலி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இம்முறை வெங்காயச் செய்கையில் அமோக விளைச்சல் கிடைத்துள்ளது.

வெங்காய அறுவடை வேலைகள் ஆரம்பமாகியுள்ளபோதும், அறுவடைக்கான கூலித்தொழிலாளர்களைப் பெறுவதில் பலத்த சிரமத்தை விவசாயிகள் எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன், அறுவடைக் கூலிகள் அதிகரித்துள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.(ச)

# காணாமற்போனோர் ஆணைக்குழு இருதரப்பும் எந்தப் பதிலும் இல்லை!

## செஞ்சிலுவைச் சங்கப் பேச்சாளர் தெரிவிப்பு

காணாமற்போனோர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவொன்றை அமைக்க - சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சமர்ப்பித்த ஆலோசனைக்கு, அரசும் - புலிகளும் இதுவரை தமக்குப் பதில் எதையும் அனுப்பிவைக்கவில்லை என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளார் சுகுமார் றொக்வூட் தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கும், புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற ஐந்தாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்களின்போது, செஞ்சிலுவைச்சங்கம் இந்தச் சிபார்சுகளைக் கையளியத்திருந்தது.

இதற்கு இரண்டு தரப்பும் இதுவரை எந்தப் பதிலையும் வழங்கவில்லை. இந்த ஆணைக்குழுவில் - புலிகள் மற்றும் அரசதரப்புப் பிரதிகளே இடம் பெற்றிருப்பர் என்றும், ஆலோசகர் நிலையிலேயே சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் இருக்கும் என்றும், அந்தச் சிபார்சில் கூறப்பட்டிருப்பதாகவும் சுகுமார் றொக்வூட் மேலும் தெரிவித்தார். (க)

# கனடிய அமைச்சரின் இலங்கை விஜயம் ரத்து

கனடிய வெளிவிவகார அமைச்சர் - இலங்கை, இந்தியா, மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு மேற்கொள்ள விருந்த விஜயத்தை ரத்துச்செய்துள்ளதாகக் கொழும்பிலுள்ள கனடிய தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

நாளை முதல் இரண்டு நாட்கள் கனடிய வெளிவிவகார அமைச்சர் பில் கிரகம் தலைமையான இராஜதந்திரிகள் குழு - இலங்கைக்கு விஜயம் செய்ய ஏற்பாடாகியிருந்தது.

இந்தக் குழுவினர் - ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை கொழும்பில் சந்தித்து, தற்போதைய சமாதான முயற்சிகள் குறித்துக் கலந்துரையாடத் திட்டமிட்டிருந்தனர்.

அத்துடன், வன்னிக்குச்சென்று புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோரையும் சந்திப்பதற்குக் கனடிய வெளிவிவகார அமைச்சர் திட்டமிட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வளைகுடாப் பகுதியில் ஏற்பட்டுள்ள நெருக்கடிநிலையினால், கனடிய வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயம் ரத்துச்செய்யப்பட்டிருப்பதாகக் கனடியத் தூதரக வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

# பெண்கள் வேலைவாய்ப்புத் தேடி வெளிநாடு செல்வது புத்தியல்ல!

## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

(கொழும்பு)

பெண்கள் வெளிநாடுகளுக்குச் சென்று வேலைவாய்ப்புத் தேடுவது புத்திசாலித்தனமானதல்ல எனத் தெரிவித்திருக்கிறார் நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

பெண்கள் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புத் தேடிச்செல்வதால்- குடும்பரீதியாகப் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள். இதனால், பெண்கள் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புத் தேடிச் செல்வது புத்திசாலித்தனமானதல்ல.

உள்ளூரில் பெருமளவிலான சுயதொழில் வாய்ப்புக்கள் இருக்கும்போது, பெண்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் கூடியகவனம் செலுத்துவது வியப்பாக இருப்பதாகவும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

மகரகமவில் சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி நடத்தப்பட்ட கருத்தரங்கில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.




வட - கிழக்குக் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன், கரவெட்டிப் பிரதேசசெயலர் பிரிவில் நடந்தப்படும் தையல் பயிற்சி நிலையத்தில் - தையல் மற்றும் மனையியல் கண்காட்சியையும், விற்பனையையும் ஆரம்பித்து வைத்து யாழ்.செயலக தலைமைக்காரியாலய உதவி அரசாங்க அதிபர் க.வீரபத்திரபிள்ளை உரையாற்றுவதையும், கரவெட்டி பிரதேச செயலர் க.கனகரத்தினம், பருத்தித்துறைப் பிரதேசசெயலர் ஆ.சிவசுவாமி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (17)

# பத்து வருடங்களில் பாரிய காலநிலை மாற்றம் இயற்கை அழிவுகள், நோய்கள் ஏற்படும் ஆபத்து

## சூழலியல் விஞ்ஞானிகள் எச்சரிக்கை

அடுத்த பத்து வருடங்களில் இலங்கையின் காலநிலையில் பாரிய மாற்றங்கள் ஏற்படும் என்று சூழலியலாளர்கள் எச்சரிக்கை செய்துள்ளதால் - இதன் பாதிப்பைக் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கம் - சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருகிறது.

அடுத்த பத்து வருடங்களில் இலங்கையின் காலநிலையில் பாரிய மாற்றங்கள் ஏற்படும். மழைவீழ்ச்சி கணிசமாகக் குறையும், இதனால் விவசாயம் பாதிக்கப்படும். நீர்நிலைகள் வற்றி, கடும் வரட்சி ஏற்படும். அத்துடன், எதிர்பாராத சூறாவளி வீசும் அபாயமும் உள்ளது.

இந்த அபாயநிலை இலங்கையில் மட்டுமன்றி, இந்தப் பிராந்தியம் முழுவதும் ஏற்படும் என்று - காலநிலை மாற்றம் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் தலைவரான ஆர்.கே.பச்சோரி தெரிவித்தார்.

2010 ஆம் ஆண்டளவில் ஏற்படக்கூடிய இந்த மாற்றங்களால், சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டு, நோய்கள் பரவும். நீரால் பரவும் நோய்களின் தாக்கம் அதிகரிக்கும்.

இப்போது நாட்டின் சில பகுதிகளில் மட்டும் மலேரியா நோயின் தாக்கம் காணப்படுகின்றது. ஆனால், காலநிலை மாற்றத்தால் நாடு முழுவதும் மலேரியா நோயின் பாதிப்பு ஏற்படலாம்.

இலங்கையில் சூழல் வெப்பநிலை மூன்று பாகை செல்சியஸால் அதிகரிக்கவும், கடல்மட்டம் அரை மீற்றரால் அதிகரிக்க வாய்ப்பிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய நிலையில் காலநிலை மாற்றத்தைத் தடுப்பது பற்றியோ - அதன் பாதிப்புக்களை தடுப்பது குறித்தோ யோசிக்கவில்லை என்றும் - தடுப்பு நடவடிக்கைகளை எவ்வாறு திட்டமிடலாம் என்பது குறித்தே ஆராயப்பட்டு வருவதாகவும் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.கே. பச்சோரி மேலும் தெரிவித்தார்.

# ஜூன் மாதத்திற்குப் பின்னர் அரசை அசைக்க முடியாது!

## திலக் மாரப்பன நம்பிக்கை



ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் எதிர்வரும் ஜூன் மாதம் வரை பதவியில் இருந்தால் - அதற்குப் பின்னர் இந்த அரசாங்கத்தை எவராலும் கவிழ்க்கமுடியாது என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.

பத்தேகம விளையாட்டரங்கில் நடைபெற்ற தெற்கு அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தை ஆரம்பித்துவைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை மேம்படுத்துவதற்காக ஜூன் மாதமளவில் பெருமளவு வெளிநாட்டு நிதியுதவிகள் கிடைக்கவுள்ளன. அதன்பின்னர் நாட்டின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் துரிதப்படுத்தப்படும்.

இதனால், பொதுமக்களை எவராலும் ஏமாற்ற முடியாது போய்விடும்.

இப்போதும் அரசாங்கத்திற்கு 25 பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளித்து வருகின்றனர் என்றும் திலக் மாரப்பன மேலும் தெரிவித்தார்.

# வட - கிழக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கம் 50 மில்லியன் ரூபா நிதியுதவி

வட - கிழக்குப் பகுதிகளில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்களை, மீள அமைப்பதற்கு அரசாங்கம் 50 மில்லியன் ரூபாவை உதவியாக வழங்கவுள்ளதாகக் கூட்டுறவுத்துறை அமைச்சர் ஏ.ஆர்.எம்.காதர் தெரிவித்தார்.

வட-கிழக்குப் பகுதிகளில் உள்ள கூட்டுறவுச்சங்கங்கள் யுத்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் அவற்றைச் சீராகச் செயற்பட வைக்கவே, அரசாங்கம் 50 மில்லியன் ரூபாவை ஒதுக்கத் தீர்மானித்துள்ளது.

இந்த உதவியை வழங்க அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுவதற்குப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. அமைச்சரவை அனுமதி கிடைத்ததும் இந்த நிதியைக் கூட்டுறவுச்சங்கத்திற்கு வழங்கக்கூடியதாக இருக்கும்.

பொருளாதாரப் பிரச்சினைகளால் திறைசேரியில் இருந்து நிதியுதவியை வழங்காவிட்டாலும்கூட, கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திலிருந்து இந்த உதவியை வழங்கலாம் என்றும் அமைச்சர் ஏ.ஆர்.எம்.காதர் மேலும் தெரிவித்தார்.

# தப்பியோடியோருக்குச் சட்ட அங்கீகாரம் இராணுவ அதிகாரிகள் மத்தியில் சர்ச்சை

(கொழும்பு)

இராணுவச் சிப்பாய் ஒருவரைப் பயிற்றுவிக்க சுமார் ஒரு இலட்சம் ரூபா தேவைப்படுகிறது. இந்தநிலையில் தப்பியோடிய படையினரை சேவையிலிருந்து நீக்குவதாக அறிவிப்பது தவறான அணுகுமுறை என்று இராணுவ அதிகாரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இராணுவத்திலிருந்து இதுவரை அறுபதாயிரம் பேர்வரை தப்பியோடியுள்ளனர். இவர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவதற்காக அரசாங்கம் சுமார் ஆறு பில்லியன் ரூபாவை பொதுநிதியிலிருந்து செலவிட்டிருக்கின்றது.

இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு முதற்கட்டப்பயிற்சிக்கு- 19,650 ரூபாவும், அடிப்படைப் பயிற்சிக்கு 15,200 ரூபாவும் பரணப்படுத்தப்பட்ட பயிற்சிக்கு 70,000 ரூபாவும் செலவாகின்றது.

இராணுவத்திலிருந்து தப்பியோடியுள்ள 60 ஆயிரம் பேரில்,. 500 பேர் அதிகாரிகளாவார். தப்பியோடிய படையினரில் 70 சதவீதமானோர் இராணுவத்தில் இணைந்து ஒருவருடம்கூட சேவையாற்றாதவர்கள் என்றும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சின்ன மீனைப் போட்டு பெரிய மீனைப் பிடிப்பது எப்படி....?

**பகுதி 4**

**பனங்காட்டு நரியார் புலனாய்வில்**

கடந்த வருடத்தின் முதலாம் காலாண்டு கடந்து சென்ற பின்னர் மக்கள் ஜனநாயகப் பேரவையின் அலுவலகத்தில் ஒரு வகையான உற்சாகம் தெரிந்தது. வழமைக்கு மாறாகப் பல புதுமுகங்கள் அந்த அலுவலகத்துக்கு வந்து செல்வதை அவதானிக்க முடிந்தது. அதனால் அலுவலகம் விறுவிறுப்படைந்தது.

அதேவேளை, அலுவலகத்திற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளிலும் அதிக மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. காவலர் கடமைக்காக இரண்டு இளைஞர்கள் மாதாந்தக் கூலி அடிப்படையில் அமர்த்தப்பட்டனர். இவர்களில் ஒருவர் அதிக அப்பாவித்தனமுள்ளவர். மற்றையவர் ஈ.பி.டி.பி. கட்சியிலிருந்து விலகியவர். ஆனால், இறுதிவரை இவர்களுக்கான சம்பளம் எதுவும் வழங்கப்படவில்லை.

மக்கள் ஜனநாயகப் பேரவையின் உறுப்பினர்கள் காலவோட்டத்தில் ஒவ்வொருத்தராகக் கட்சியை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர். எஞ்சியிருந்தவர்களில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான இராமேஸ்வரன் மற்றும் சிவா என்று அழைக்கப்படும் குணசீலன் ஆகிய இருவருமே முக்கியமானவர்கள்.

இவர்களில் சிவா என்பவர் தான் அக்கட்சியின் அனைத்து நிறைவேற்று அதிகாரங்களையும் கைவசம் வைத்திருந்தார். தீவகத்தில் கடற்படையினருடனும், யாழ்.நகரில் பொலிஸ் மற்றும் 512 ஆவது பிரிகேட் படை முகாம் ஆகியவற்றுடன் நட்புறவையும், ஐக்கியத்தையும் பேணிவந்தார்.

எனினும், கடந்த ஆண்டு இறுதியில் சிவாவும் கட்சியைவிட்டு வெளியேறினார். அவர் உடனடியாகவே நாட்டைவிட்டும் வெளியேறிச் சென்றுவிட்டார். இதன் பின்னர் முகமட் அலியார் மசூத், தானே அக்கட்சியின் செயற்திறன் வாய்ந்த உறுப்பினராகச் செயற்பட்டார்.

இக்கட்சியில் புதிதாக உருவாகிய இச்சூழல், இந்த மோசடிக் கும்பலின் தலைவர் முகமட் அலியார் மசூத்துக்கு மிகவும் வாய்ப்பாக மாறியது. அக்கட்சியின் அலுவலகத்தையும் அங்குள்ள பௌதீக வளங்களையும் தனது மோசடி வியாபாரத்துக்காகப் படிப்படியாகப் பயன்படுத்தத் தொடங்கினார் அந்த மசூத்.

இதனொரு அங்கமாகவே அதுவரை அங்கே மறைத்து வைக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கியொன்று மசூத்தின் கரங்களுக்குச் சென்றது.

இதன்பின், மசூத் யாழ்ப்பாணத்தில் பலம்வாய்ந்த மனிதர்களில் ஒருவராக மாறிவிட்டார். இதனால் தனது வியாபார நடவடிக்கைகளை மேலும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்தார்.

கட்சியின் அதிகாரபலம் கைமாறிக் கொண்டிருக்கும் கசப்பான உணர்வு படிப்படியாக இராமேஸ்வரனின் மனதில் குடியேற ஆரம்பித்தது. நீண்டகாலமாக அவரது வலது கரமாக இருந்து செயற்பட்ட சிவா கட்சியில் அப்போது இல்லாமையால் ஒரு வெறுமை உணரப்பட்டது. மசூத்தின் செயற்திறன் வேகம் இராமேஸ்வரனின் விசாலமற்ற ஆளுமைக்கு முன்னால் சவாலாக எழுந்து நின்றது. உண்மையில் மசூத்தின் கில்லாடித்தனத்தின் முன்பாகப் பணிந்து செல்வதைத் தவிர இராமேஸ்வரனுக்கு வேறு வழியிருக்கவில்லை.

கட்சியின் ஆரம்பகாலத்தில் எதிர்கொள்ளப்பட்ட பல சிக்கல்களைத் தீர்த்துக்கொள்வதற்கு மசூத் அப்போது உதவிபுரிந்திருக்கின்றார். அதற்கு கைமாறு செய்யவே கட்சி அலுவலகத்தில் மசூத் குழுவினர் தங்கிக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. அதன் விளைவு இந்த நிலைக்கு கட்டுமீறிச் செல்லும் என்று இராமேஸ்வரன் எதிர்பார்த்திருக்கமாட்டார்.

மேலும் மேலும் மசூத் தனது செயற்திறனை அதிகரித்துச் சென்றார். அது இராமேஸ்வரனின் அடிமனதில் கிலியூட்டியது. அந்தச் சூழலின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு இராமேஸ்வரன் தீர்மானித்துக் கொண்டார்.

நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு எவருக்கும் தெரியாமல் அவர் முயற்சிகளைச் செய்தார். இம்முயற்சி பற்றி மசூத், அரசல் புரசலான தகவல்களைப் பெற்றுக் கொண்டுவிட்டார்.

கடந்த ஆண்டின் இறுதியாக எஞ்சியிருந்த சில நாட்கள் எண்ணப்பட்டுக்கொண்டிருந்தவேளையில் இராமேஸ்வரன் குடாநாட்டை விட்டுக் கிளம்பிவிட்டார்.

இப்போது மசூத் அக்கட்சியின் தலைவர். அவரின் உத்தரவுப்படியே எல்லாம் அங்கே நடந்தது. பல்வேறு போலி நிறுவனங்களின் பெயரைப் பாவித்துத் தனது மோசடிகளை இதுவரை செய்து வந்த மசூத் இலகுவாகவே - மக்கள் ஜன நாயகப் பேரவை என்ற அந்த அரசியல் கட்சியின் பெயராலும் தனது மோசடி நடவடிக்கைகளை முடுக்கி விட்டார்.

(தொடரும்)

## இறுதியாக அலுவலகத்தில் தங்கியிருந்தவர் இவர்களே!



சத்தியேந்திரா

தாய், தகப்பன் இல்லாத சோகம் இவனிடம் நிரந்தரமாகக் குடிகொண்டிருந்தது. அபரிமிதமான அப்பாவித்தனமும் இவனிடம் ஒட்டிக்கொண்டிருந்தது. சம்பளம் மட்டுமல்ல. சாப்பாட்டுக்கு கூட பணம் வழங்காமல் அதிக காலம் இவனிடமிருந்து வேலை வாங்கப்பட்டிருக்கிறது. அரவணைக்க எவருமின்றி இப்போதும் இவன் அதே கட்டடத்தில் தஞ்சமடைந்துள்ளான். இதுவரை இவனைப் பயன்படுத்தியவர்கள் எங்கே தொலைந்தார்கள்?



பாண்டியன்

''குருநகரில் கடற்றொழில் செய்துகொண்டு குடும்பத்துடன் சந்தோசமாக இருந்தேன்.

மாதம் பத்தாயிரம் ரூபா சம்பளம் தருவதாகக் கூறி என்னைத் தம்முடன் இணைத்துக்கொண்டனர். மாதக்கணக்காக இவர்களுடன் அலைந்ததும் கால்கடுக்க காவல் நின்றதும்தான் மிச்சம். சம்பளப் பணம் எதுவும் எனக்கு கிடைக்கவில்லை''.

# பிக்கப் வாகனங்களை மீளப்பெறுவதற்கு ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை?

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சிவாஜிலிங்கம் கேள்வி

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட பிக்கப் வாகனங்களை மீளப்பெறுவதற்கு, இதுவரை ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? உடனடியாக அவற்றை மீள ஒப்படைக்க வேண்டும். இல்லையெனில், அவர்களுக்கு எதிராகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்படல் வேண்டும்.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் - நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் திணைக்களத்தின் சார்பில் பிரசன்னமாயிருந்த அதிகாரிகளிடையே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் கடந்தமாதம் 17 ஆம் திகதியுடன் முடிவடைந்தும், அவற்றின் தலைவர்கள் பாவித்த பிக்கப் வாகனங்கள் இன்னமும் ஒப்படைக்கப்படவில்லை.

வாகனங்களை மீளப்பெறுவதற்கு நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் எனக் கேள்வி எழுப்பிய சிவாஜிலிங்கம், இதுவரை மீளஒப்படைக்காதவர்களுக்கு எதிராக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட வேண்டும். அத்துடன், அவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்த அதிகாரி ஒருவர் - 13 பிரதேசசபைகளில், ஏழு பிரதேசசபைகளுக்கு - உள்ளூராட்சித் திணைக்களத்தினாலும், ஆறு பிரதேசசபைகளுக்கு றான் அலுவலகத்தினாலும் பிக்கப் வாகனங்கள் வழங்கப்பட்டதாகவும், இவற்றில் - வலிகாமம் வடக்கு, சாவகச்சேரி, பளைப் பிரதேசசபை ஆகியவற்றின் வாகனங்கள் ஒப்படைக்கப்பட்டுவிட்டதாகவும், ஏனையவற்றைப் பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். (ச)

### கிராமசேவகரின் பெயர்ப்பலகை மாயம்

(யாழ்ப்பாணம்)


கடந்த சில நாட்களுக்கு முன்னர் அராலி மத்தி கிராம சேவையாளரின் பெயர்ப்பலகை அலுவலகத்திலிருந்து இனந் தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளது.

இதுபற்றி அப்பகுதியைச் சேர்ந்த கிராம சேவையாளர் சங்கானை உதவிப் பிரதேசசெயலர் மு.சிவராசாவிடம் முறையீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (118)

# மன்னார் மாவட்ட கச்சேரி விடுதியில் தங்கியுள்ள படையினரும் பொலிஸாரும்

மன்னார் மாவட்ட அரச செயலகத்தின் 5 விடுதிகளில் படையினர் மற்றும் பொலிஸார் நிலை கொண்டிருப்பதால், அரச செயலக ஊழியர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் மாவட்ட அரச செயலகத்தில் உள்ள படையினர் மற்றும் பொலிஸாரை வெளியேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்காததை, மன்னார் மாவட்டப் பொது அமைப்புகளின் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.



அரியாலை ஸ்ரீகலைமகள் சனசமூக நிலையத்தில் நடை பெற்ற சிவராத்திரி விழாவின்போது, அரியாலை ஸ்ரீ கலைமகள் சன சமூகநிலையப் பாலர் பாடசாலை மாணவர்கள் வழங்கிய நாடகத்தில் ஒரு காட்சி. (55)

# காணாமற்போனோர் பிரச்சினை; பிரதமர் ரணிலை சந்திக்க முடிவு!

காணமற்போனோர் சங்கத்தின் உறுப்பினர்கள் - ஏப்பிரல் 30 ஆம் திகதிக்குமுன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும், பிரதமரின் செயலாளரையும்,புனர்வாழ்வு அமைச்சின் செயலாளரையும் சந்திக்கவுள்ளனர்.

காணமற்போனோரின் பாதுகாவலர் சங்கத்தின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துதருவதாக உறுதியளித்துள்ளார்.

ஜனவரி மாதம் 7 ஆம் திகதி பிரதமரின் செயலாளரைச் சந்தித்த இக்குழுவினருக்கு, காணாமற்போனோர் தொடர்பாகத் தாம், 2 மாதத்திற்குள் உரிய பதிலைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தும், இன்று வரை எந்தவித பலனும் கிட்டவில்லை எனப் பெற்றோர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, பிரதமர் மற்றும் உயரதிகாரிகளை - 6 பேர் கொண்ட குழு சந்தித்து இறுதி முடிவு எடுக்கவுள்ளதாகவும், தமக்கு நட்டஈட்டைப்பெற்றுத் தரும்படி கோரப்போவதாகவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ரா)

# 2 இலட்சத்து 56 ஆயிரம் குடும்பங்கள் இன்னமும் மீளக்குடியமரவில்லை

(யாழ்ப்பாணம்)

யுத்த நடவடிக்கைகளால் குடாநாட்டைவிட்டு வெளியேறிய இரண்டு இலட்சத்து 56 ஆயிரம் குடும்பங்கள் இன்னமும் மீளக்குடியமரவில்லை.

அரசாங்கம் மேற்கொண்ட ஆய்வுகளின்போது, இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

1918 ஆம் ஆண்டு குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்பின்போது, 8 லட்சத்து 21 ஆயிரம் மக்கள் வாழ்ந்தனர்.


கடந்தகால யுத்தநடவடிக்கையின்போது பெருமளவிலான மக்கள் குடாநாட்டிலிருந்து வெளியேறி, ஏனைய மாவட்டங்களுக்குச் சென்றதுடன், வெளிநாடுகளுக்கும் புலம் பெயர்ந்திருந்தனர்.

தற்போது யாழ். குடாநாட்டில் 5 இலட்சத்து 65 ஆயிரம் குடும்பங்கள் இருப்பதாக, அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது தெரியவந்துள்ளது.


இதில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டபின்பு 40 ஆயிரம் குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளதாக இந்த ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது. (ச)

# அந்தாட்டிக்காவில் பிரதான வீதி நிர்மாணம்

தென்துருவமான- அந்தாட்டிக்காவில் ஆயிரம் மைல் நீளமான பிரதான வீதி ஒன்றை அமைக்கும் முயற்சியில் பொறியியலாளர் குழுவொன்று இறங்கியுள்ளது. உலகில் அமைக்கப்பட்ட வீதிகளில் மிகவும் சிரமப்பட்டு அமைக்கப்படப்போகும் வீதியாக இது இருக்கும். அந்தாட்டிக்கின் கரையோர இறங்கு தளமான- மக்மேர்டோ நிலையத்திலிருந்து இந்தப்பாதை துருவ நடுப்பகுதிவரை அமைக்கப்படும்.



இதன் மூலம் பனிக் கண்டத்தில் ஆய்வாளர்கள் சுலபமாகப் போக்குவரத்து செய்யும் வாய்ப்புக் கிடைக்கும். முதல் 30 மைல் வீதி அமைப்பது சுலபம். அதன்பின்பே. பனிப்



பாறைகளுடன் நாம் போராட வேண்டியிருக்கும் என- இதில் ஈடுபட்டுள்ள பொறியியலாளர் கூறுகிறார். அந்தாட்டிக்கில் கடும்பனி ஆரம்பிக்க முன், 87 மைல் நீளவீதியை அமைத்துவிடலாம் என நம்பப்படுகிறது. 2005 ஆம் ஆண்டளவில் இவ்வீதி பூரணப்படுத்தப்பட்டுவிடும். சரி, ஞாயிற்றுக்கிழமைகளில் இந்த வீதியும் மூடப்படுமா என்பதுதான் தெரியவில்லை!.

# ஈராக்கின் புராதன மின்கலம்

போர் எவரையும் விட்டுவைப்பதில்லை. மக்கள், படையினர், தலைவர்கள், கலா சாரம், வரலாறு எல்லாமே அதற்கு முன் நிற்க முடியாது. ஈராக்- ஆம் அது இன்று பெரிய தொரு போர் ஆபத்தை எதிர்நோக்கி நிற்கிறது. இது சாதாரண நாடல்ல. செழுமையான பாரம்பரியம், வரலாறு என்பவற்றைக் கொண்ட, தொன்மை மிகுந்தநாடு. அழகிய ஏடன் தோட்டமும் இந்த புராதன நாட்டில்தான் உள்ளது.



இந்தநாட்டில் உள்ள தொல்பொருள் காட்சியகத்தில், புராதன மின்கலம் (Battery) ஒன்று உள்ளது. 1938 ஆம் ஆண்டு - தொல்பொருள் ஆய்வின்போது மண்ணுக்குள் இருந்து மீட்கப்பட்ட தொன்மையான மின்கலம் இது. அமெரிக்காவின் எவரெடி மின்கலத்துக்கு முன்பே, 10 ஆயிரம் ஆண்டுக்கு முன் இந்தமின்கலத்தை ஈராக் கியர் உபயோகித்திருக்கின்றனர்.

13 செ.மீ. நீளமான மட்குடம் ஒன்றை ஜேர் மனிய புதைபொருள் ஆய்வாளர் வில்ஹெய்ம் நிவ் மீட்டபோது, அது ஓர் மின்கலம் என அவருக்குத் தெரியாது. இந்த மட்குடத்தினுள் செம்பிலான ஒரு சிலிண்டர், அதனுள் ஓர் இரும்புக்கோல். சிலிண்டர் அரிப்பிற் குள்ளாகியிருந்தது. சோதனைகள் மூலம் இந்த செம்பு சிலிண்டரினுள்- வினாகிரி அல்லது வைன் போன்ற அமிலத்திரவம் இருந்திருக்கும் எனக் கண்டறியப்பட்டது.

மேற்கத்தையர்கள் மின்கலத்தைக் கண்டுபிடிக்க முன்பே, ஈராக்கியர் இதை உபயோகித்தமை கண்டுபிடிக்கப்பட்டது வியப்பான ஒரு உண்மை.

# ஐரோப்பிய விண்திட்டத்தில் பின்னடைவு

வால்வெள்ளிகளைச் செயற்கைக்கோள்கள் மூலம் துரத்திச்சென்று, ஆய்வுசெய்யும் ஐரோப்பாவின் விண்திட்டத்தில் சில பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. ரொசெற்றா எனும் விண்கலத்தை முதலில் இவ்வருட ஜனவரியில் விர்ரெனன் எனும் வால்வெள்ளியைத் துரத்திச்சென்று, ஆய்வுசெய்ய அனுபபதிட்டமிடப்பட்டிருந்தது. எனினும், அதன் உந்து கருவியில் காணப்பட்ட சில தொழில்நுட்பக் கோளாறுகள் இத்திட்டத்தைக் கைவிடச் செய்துள்ளது.





அடுத்தாண்டு முற்பகுதியில் இது செலுத்தப்படலாம் எனக் கருதப்படுகிறது. கடந்த ஆண்டு அனுப்பப்படவிருந்த ஐரோப்பாவின் ஏரியான்-5 விண்கலமும் செலுத்தியில் ஏற்பட்ட கோளாறினால் கட்டையில் ஏற்றப்பட்டுள்ளது. கொலம்பியாவின் பாதிப்பு இன்னும் நீங்கிவிடவில்லைப்போலும்!.




# சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த சார்லி சாப்ளின்

## அங்கம் - 23



லண்டனில் சார்லிக்கு நல்ல வரவேற்பளிக்கப்பட்டதோடு, அவரை மேதை என்றும் புகழ்ந்தார்கள். அமெரிக்காவில் மோசமான தாக்குதல்கள் தொடர்ந்தன. ஆனால், சில செய்தித்தாள்கள் மட்டும் நிதானத்தை இழக்கவில்லை.

"சாப்ளின் ஒரு கலைஞர். அவருடைய ஜொலிக்கும் திறமை, அவரைச் சுவீகாரம் எடுத்துக் கொண்ட நாட்டின் மேல் பல வருடங்களாக ஒளிபரப்பிய தோடு, உலகுக்கே சந்தோஷத்தைக் கொடுத்தது" என்று 'த நேஷன்' எழுதியது.

ஆனால், எப்.பி.ஐ.- சார்லியன் குடும்பப் பணியாட்களைக் கேள்வி கேட்டுக்கொண்டிருந்தது. சார்லியின் பெயரைக் கெடுக்க ஆதாரங்களைத் தேடிக் கொண்டிருந்தது. இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னால், சார்லியின் மனைவியாக இருந்த லிட்டா கிரேயை அவர்கள் குறுக்கு விசாரணை செய்தார்கள். ஆனால், அவள் சார்லிக்குப் பாதகமாக எதையும் கூறத் தைரியமாக அவர் மறுத்துவிட்டார்.

சார்லி மீண்டும் அமெரிக்கா திரும்ப முடியாதநிலையில், அவர் குடும்பம் சுவிற்சர்லாந்திற்குச் சென்றது. கோசியர்-சர்-வெவே என்னுமிடத்திலிருக்கும் அழகான வீட்டில், 1953 ஜனவரியில் அவர்கள் குடியேறினார்கள். சார்லி இறுதிவரை அங்குதான் வசித்தார்.

அமெரிக்கா சார்லியைக் கைவிட்டிருந்தாலும், அவருக்குக் குடும்பம் இருந்தது. இப்போது அவருக்கு ஜெரால்டின், மைக்கேல், ஜோஸபைன், விக்டோரியா, யுகேன் என்று ஐந்து குழந்தைகள். அதோடு, பிற உலகநாடுகளின் ஆதரவும் இருந்தது.

1954 மே மாதம், சார்லிக்கு உலக அமைதிக்குழு பரிசு வழங்கப்பட்டது. அவர் பணத்தைப் பாரிஸிலும், லண்டனிலும் இருக்கும் ஏழை மக்களுக்காகக் கொடுத்துவிட்டார்.

'எ கிங் இன் த நியூயார்க்' என்று ஒரு படம் எடுக்கத்தொடங்கினார். ஆனால், அது வெற்றிபெறவில்லை. அது மெகார்திஸத்தைத் தாக்கியது. ஒருவேளை சார்லியின் மேதைமையை- காழ்ப்புணர்ச்சி மூழ்கடித்திருக்கலாம்.

மேலும் மூன்று குழந்தைகள் பிறந்தன. 1951 இல் ஜேனும், 1952 இல் ஆனட்டும்; 1969 இல் கிரிஸ்டோபரும் பிறந்தார்கள். சாப்ளின் குடும்பம் இதோடு முழுமை பெற்றது.

முறையான கல்வியறிவு இல்லாத சார்லிக்கு, 1962 ஆம் ஆண்டில் 'ஒக்ஸ்போர்ட்' மற்றும் 'டுர்ஹேம்' பல்கலைக்கழகங்கள் கௌரவ டாக்டர் பட்டங்கள் வழங்கிக் கௌரவித்தன.

இத்தோடு, சோகமும் இருந்தது. 1965 இல் சார்லியின் பிறந்த தினத்தன்று, அவர் சகோதரன் சிட்னியின் மரணச்செய்தி கிடைத்தது.

பாரிஸின் கௌரவமான விருதான 'கிராண்ட் மெடல் டே வெர்மெய்ல்' 1971 இல் கொடுக்கப்பட, 1972 இல் அமெரிக்கா மீண்டும் அவரை அழைத்துக்கொண்டது.

பலரின் சந்தோஷங்களை அழித்த மெகார்த்தேயும், அவனுடைய அடியாட்களும் 1954 ஆம் ஆண்டில் முழுதுமாக நம்பிக்கை இழந்தார்கள். அவர்கள் போலிச் சாட்சிகளைக் கையாண்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இப்போது அமெரிக்கா இருகரம் நீட்டிச் சார்லியை வரவேற்றதோடு, விருது மழையே பொழிந்தது. அவருக்கு நியூயார்க்கில் பரவசமான வரவேற்பளிக்கப்பட்டு, ஹேண்டல் பதக்கமும் கொடுக்கப்பட்டது. ஹொலிவுட்டில் பலரது பாராட்டுதல்களுக்கிடையே, அவருக்குச் சிறப்பு அக்கடமி விருது வழங்கப்பட்டது. புகழாரங்கள் தொடர்ந்தன. வெனீஸில், புனித மார்க் சதுக்கம், 'சிட்டி லைட்ஸ்' திரையிடப்படுவதற்காகத் திறந்தவெளித் திரையரங்காக மாற்றப்பட்டது. வெனிஸ் திரைப்பட விழாவின் தங்கச் சிங்கம் விருது சார்லிக்கு வழங்கப்பட்டது.

ராணி விக்டோரியாவின் காலத்தில்- லண்டன்நகரின் ஏழைச் சிறுவர்களுள் ஒருவனாக இருந்த சார்லிக்கு, 1975 ஆம் ஆண்டில், எண்பத்தாறாவது பிறந்ததினத்திற்கு முன், ராணி இரண்டாம் எலிசபெத் கௌரவப்பட்டம் அளித்தார். அதிலிருந்து அவர் சேர் சார்லஸ் ஸ்பென்சர் சாப்ளின் ஆனார்.

கடுமையான உழைப்பும், பெரிய வெற்றிகளும், தோல்விகளும், சோதனைகளும், நிறைந்த வாழ்க்கைக்குப் பிறகு- ஒரு பொன்னான காலத்திற்குள் அடியெடுத்து வைத்தார் சார்லி. அவர் உடலால் பலவீனப்பட்டு வந்தாலும், வழக்கம்போல் உழைப்பதையே விரும்பினார்.

"உழைப்பது என்பதுதான் வாழ்வது, நான் வாழ விரும்புகிறேன்" என்று அவர் கூறினார்.

சார்லி இன்னொரு படத்தைத் தொடங்கப்போவதாகக் கூறினாலும்- அவர் மிகவும் வயதாகியும், தளர்ச்சியடைந்தும் இருந்தார். வெகுகாலம்வரை சார்லிக்குப் பணிவிடை செய்வதில், தனக்கு உதவுவதற்கு எவரையும் ஊனா அனுமதிக்கவில்லை. இறுதியில் ஒரு பணிப்பெண்ணை வைத்துக்கொள்ளச் சம்மதிக்க வைக்கப்பட்டாள்.

1977 கிறிஸ்மஸ் இரவு- அந்த வீடே குழந்தைகளுடனும், பேரக் குழந்தைகளுடனும் சந்தோஷத்தில் மிதந்தது. 'கிறிஸ்மஸ் தாத்தா' பளபளக்கும் மரத்திலிருந்து பரிசுகளை விநியோகிக்க வந்தார். சார்லி தன் அறைக்கு ஓய்வெடுக்கச் சென்றபின், அந்த வீட்டில் எழும்பிய குதூகலம் மற்றும் சந்தோஷக் குரல்களைச் சார்லியும் கேட்கவேண்டும் என்பதற்காக அவர் அறையின் கதவைத் திறந்தே வைத்திருந்தார்கள்.

காலையில் அவரை எழுப்பி, கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள் கூறவேண்டிய நேரத்தில், அவர் உறக்கத்திலேயே இறந்து போயிருந்தது தெரியவந்தது. அப்போது அவருக்கு வயது எண்பத்தெட்டு.

உலகிற்கு இத்தனை சிரிப்பையும், ஊக்கத்தையும் கொடுத்த ஒருவர் மறைந்து போக, ஒரு மனிதர் சரித்திரம் நிறைவுபெற்றது.

(முற்றும்)

## திரை விமர்சனம்

# தூள்





'தீல்' இன் மற்றோர் வடிவமாக தூள். இது சண்டைக்காட்சிகளுக்காக எடுக்கப்பட்டுள்ள படம். தேர்தல் வாக்களிப்பு நிலையத்தில் இடம்பெறும் சண்டைக்காட்சியில், விக்ரம் தூள் கிளப்பியுள்ளார். தாமரைக்குளம் என்ற கிராமத்தில் இரசாயன ஆலை ஒன்றினால் சூழல் மாசடைகிறது. கிராமத்தில் படித்த பெண்ணான ஜோதிகாவையும், துணிவுள்ள இளைஞனான விக்கிரமையும் - கிராமவாசிகள் இது பற்றிப்பேசத் தமது எம்.எல்.ஏயிடம் சென்னைக்கு அனுப்புகின்றனர்.

நகரில் ஜோதிகா .சில ரௌடிகளால் இம்சிக்கப்படுகிறார். பொறுத்துப்பார்த்து, இறுதியில் கோபம் கொள்கிறார் விக்ரம். அடி, உதை. இந்த ரௌடிகளுக்குப் பின்னால் தமது பகுதி அரசியல்வாதியே இருப்பது தெரியவருகிறது. சண்டைக்காட்சிகள் தூள் கிளப்ப, அரசியல்வாதி முறியடிக்கப்பட, தாமரைக்குளம் கிராமத்துக்கு நீதியும் கிடைக்கிறது. வேறு புதினம் கதையில் இல்லை.

படத்தில் முதற்பாதி நகைச்சுவையாக நகருகிறது. விக்ரம், ஜோதிகா அவரது பேத்தியார் - பறவை முனியம்மா, சென்னையில் விவேக்கிடம் சென்றது முதல் நகைச்சுவை தூள்தான். பாட்டு, நடனம், உடையலங்காரம், நகைச்சுவை என முதல்பாதி நகர்ந்து, ஜோதிகாவை வில்லன்கள் இம்சிக்கும்வரை தொடர்கிறது. கவர்ச்சி உலாவாக ரீமா சென் வந்துபோகிறார். ஏன் வந்து போகிறார் என்பதுதான் தெரியவில்லை. ரீமா சென்னுடனான விவேக்கின் ஒரு தலையான விருப்பு எம்மை வயிறுகுலுங்கிச் சிரிக்க வைக்கிறது. புற்றுநோய்க்கதை இதன் உச்சம்.

மிகநீண்ட இரண்டாவது பாதி, விக்ரம் - வில்லன் சயாஜி ஷின்டே மோதல் - கடத்தல் - மீட்பு என்று போகிறது. பெண் ரௌடியாகச் சுவர்ணாவின் நடிப்பு பிரமாதம்.

வித்தியாசாகர் இசை, கோபிநாத்தின் ஒளிப்பதிவு திரைப்படத்தைத் தூக்கி நிறுத்துகிறது. கதை, தெரிந்தகதைபோல் இருந்தாலும், திரைப்படம் பார்க்கச் சலிப்புக் கொடுக்வில்லை. ஆனாலும், அளவுக்கதிகமான வன்முறைக் காட்சிகள்.

இயக்குநர் தாரணி இளசுகளை கவர்வது என்ற முடிவோடுதான் தூள் பறத்துகிறார் தூளில்!.

துஷி.

# நாய்கள், பூனைகளால் பிரிட்டனில் நோய் ஆபத்து!

ரேபிஸ் நோய்க்கெதிரான சட்டங்களைப் பிரிட்டன் தளர்த்தியுள்ளதைத் தொடர்ந்து, வேறுசில விலங்கு நோய்கள் பிரிட்டனுக்குள் இறக்கு மதியாகும் செல்லப் பிரா ணிகள் மூலமாகப் பரவ ஆரம் பித்துள்ளதாக- பிரிட்டிஷ் விலங்கியல் நிறுவனம் அறிவித்துள்ளது.





செல்லப்பிராணிகள் பயணத்திட்டம் என்ற புதியசட்டம் மூலம், எவரும் எந்தச் செல்லப்பிராணிகளையும் பிரிட்டனுக்குள் கொண்டுவரலாம், கொண்டு செல்லலாம். இவ்வாறு வெளி நாடுகளிலிருந்து வரும் விலங்குகளால், புதிய விலங்கு நோய்கள் பிரிட்டனில் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதனால், இவ்வாறான விலங்குகள் மீதான சோதனையை அதிகாரிகள் அதிகரித்துள்ளனர். நாய்கள், பூனைகளே அதிகம் சோதனைக்குள்ளாகும் செல்லப் பிராணிகள் என அதிகாரிகள் கூறுகின்றனர். இவற்றுக்கும் Passport திட்டம் கொண்டுவந்தால் என்ன?




# வாரம் ஒரு யோகாசனம்

## பச்சிமோத்தானாசனம்

கற்றுத்தருபவர்
**மா.மகாநேசன்** (கரவெட்டி)

இரண்டு கால்களையும் சேர்த்து நன்றாக நீட்டி, இரு கைவிரல்களாலும் இரு கால்களின் கட்டை விரல்களைப் பிடித்துக்கொண்டு, முழங்கால்களின் மேல் முகத்தைப் பதித்துக் கொண்டு அமர்ந்திருக்கவும். இரு முழங்கால்களும் வளைவின்றி நேராகத் தரையில் பதிந்திருக்க வேண்டும்.



## பச்சிமோத்தானாசனத்தின் நன்மைகள்

ஆண்களைவிட பெண்களிற்கு முக்கியமான மருந்தாகும். கருப்பை சுத்திகரிக்கப்படும், நீரிழிவுநோய் வராமல் தடுக்கும், மாதவிடாய் காலத்தில் வரும் இடுப்புவலி, வயிற்று வலி போன்ற நோய்கள் வராமல் தடுக்கும். பொறுமையுடன் செய்துவந்தால்- மலட்டுத்தன்மை நீங்கிப் பிள்ளைப்பேறு உண்டாகும். இளந்தொந்தி, பெருந்தொந்தி, ஊளைச்சதைகள் கரைந்துவிடும். மூலவியாதியையும் வராமல் தடுக்கும்.

# உணவுக்கும் தூக்கத்துக்கும் நேரம் வரும்வரை காத்திருங்கள்

பிள்ளை உணவு உண்ணும்போதும், நித்திரைக்குப் போகும்போதும்- தாய்க்கும் பிள்ளைக்கும் பிரச்சினை ஏற்படலாம். பசி வரும்வரை நாம் பொறுத்தால் அது சாப்பிடும். எமது நேரப்படி குழந்தைக்குப் பசி வருவதில்லையே. நாம் பயணம்செல்ல இருப்பதால், எமது நேரத்துக்கு உணவு கொடுக்க முயலுகிறோம். டாக்டர் கால அட்டவணை தருவது நோயாக இருக்கும்போதே. நோய் மாறியதும் உணவுவேளை இயற்கையாக இருக்க வேண்டும். அதேபோன்றுதான், தூக்கமும்- ஓடி விளையாடிக் களைத்தால், பிள்ளை தூங்கும். சிலநேரம் விழித்திருக்கும், நித்திரைகொள்ள விரும்பாது. நித்திரை என்பதை வாழ்வுமுடிகிறது எனப் பிள்ளை நினைக்கிறது. இரவும், பகலும் என்பது பிள்ளைக்குத் தெரியாது. அதனால்- பலாத்காரப்படுத்தி, பயப்படுத்தி- உணவு உண்ண வைப்பதும், தூங்க வைப்பதும் பிழையானது. பிள்ளையின் நேரம் வரும்வரை நாம் காத்திருக்கவேண்டும்.

இந்த வயதில்- முடியாது, மாட்டேன், இல்லை என்று எதற்கும் கூறப்பழகும். நான் வேறுபட்ட ஒருவர். நான் சுயாதீனமாக இருக்க ஆசைப்படுகிறேன் என்று நினைக்கிறது. அதன் அடையாளமாகவே இவ்வாறு கூறுகிறது. அதனை உணராத பெற்றோர் "நீ இப்போதே இப்படியென்றால், வளர்ந்தால் எப்படி இருப்பாய்" என்று அடிக்கிறார்கள். இதனால் உறவு உடைகிறது.

ஒவ்வொரு பிள்ளையும் விசேடமானது. ஒரு பிள்ளை விரைவாகக் கதைக்கும். மற்றப்பிள்ளை தாமதித்துக் கதைக்கும். இதனால், அடுத்த வீட்டுப்பிள்ளை இந்த வயதில் கதைக்கிறதே, நடக்கிறதே- எனது பிள்ளை நடக்கவில்லையே என்று ஒப்பிட்டுப் பார்ப்பது பிழை. காது கேட்டால் பிள்ளை கதைக்கும். காது கேட்காத பிள்ளையானால் கதைக்காது. சில நேரங்களில் நாம் மற்றப் பிள்ளைகளோடு ஒப்பிட்டு எமது பிள்ளையைப் பார்ப்பதால், பிள்ளை பெற்றோரைச் சந்தோஷப்படுத்தக் கஷ்டப்பட்டுச் செய்யப்பழகும், கதைக்கும். அதனால், கொன்னை தட்டத் தொடங்கலாம்.

வாயில் திருப்தியான நிலை மாறி, மலசலம் கழிக்கும் இடங்களில் திருப்தி ஏற்படும் காலமாக மாறும். இக் காலத்தில் மலங்கழிப்பதைப் பார்த்துப் பிள்ளை வெட்கப்படும் விதத்தில் கூறுவது பிழையாகும். மலம்,சலம் வெளிவிட்டதும், தனது ஆக்கம் என அதைப் பார்த்து பெருமை கொள்கிறது பிள்ளை. இதனை மறந்து பிள்ளையை வெட்கப்படுத்தி, அவ



மானப்படுத்தித் தீமையான அனுபவத்தைப் பெறவைப்பது பிழையாகும்.

யாராவது வீட்டில் வந்ததும், கக்கா இருப்பது பிழை என்று பிள்ளைக்குச் சொல்லும்போது, அது அடக்கி வைக்கிறது. இப்படி அடக்கிப்பழகிய பிள்ளை வளர்ந்ததும் போலியாக, பொய்யாக வாழப்பழகும். மற்றவர்களுடன் மனந்திறக்காது பழகும்.

பிள்ளை இரண்டு மூன்று வயதாகும்போது, தாய் மற்றொரு பிள்ளையைக் கர்ப்பந்தரிக்கலாம். அப்போது முதல் பிள்ளையைப் பற்றியும் சிந்திக்கவேண்டும். புதிதாகப் பிறக்கும் பிள்ளையை- முதல் பிள்ளையால் ஏற்கமுடியாது இருக்கலாம். புதிதாகப் பிறந்தால், அப்பிள்ளையைத் தூக்கி, எறிந்து விடுவேன் என்று கூறும். ஆகவே, முதல் பிள்ளையை ஆயத்தப்படுத்த வேண்டும். இல்லையேல் மனநிலை பாதிக்கப்படும். நிரோசி உளப்பாதிப்பு நிலைக்கு பிள்ளை தள்ளப்படலாம். பிறந்த பிள்ளையை யாராவது பார்க்கவந்தால், முதல் பிள்ளையைப் பாதிக்காத விதத்தில், முதல் பிள்ளையின் கையிலேயே பரிசுப் பொருட்களைக் கொடுத்து "தம்பிக்கு, தங்கச்சிக்குக் குடுங்கோ" என்று கூறவேண்டும்.

ஒரு பெண் 25 வயதில் இருக்கும்போது, அதற்குத் தாங்கமுடியாத தலைவலி ஏற்பட்டது. டாக்டரிடம் சென்றபோது அதற்கான காரணம் எதுவும் தெரியவில்லை. உளவியல் டாக்டரிடம் அழைத்துச் சென்றபோது அதற்கான காரணம் புரிந்தது. குடும்பத்தில் இவள் முதற் பிள்ளை. இவளுக்கு மூன்று வயதாக இருக்கும்போது மற்றப்பிள்ளை பிறந்தது. பெற்றோர் முழு அவதானத்தையும் பிறந்த இரண்டாவது பிள்ளைக்கே செலுத்தினர். முதற்பிள்ளை எத்தனையோ சந்தர்ப்பங்களில் பெற்றோரின் அவதானத்தை எடுக்க முயன்றுபார்த்தும் பயன் அளிக்கவில்லை. ஒருநாள் அப்பா எழுதிக்கொண்டிருந்தபோது, இவள் ஒரு படத்தைக் கீறிக் கொண்டுவந்து அப்பாவிடம் காட்ட வந்தாள். அப்பா பிள்ளையை ஏசி, அம்மாவிடம் அனுப்பிவிட்டார். இப்படி பல முயற்சியும் பலனளிக்கவில்லை. இறுதியாக வீட்டில் பீங்கான்களைக் கழுவி, வீட்டை ஒழுங்குபடுத்துகிறாள். அதனால் நல்ல பிள்ளை என்று பெற்றோரின் பாராட்டைப் பெறுகிறாள். அன்றிலிருந்து பெற்றோரின் அன்பைப் பெறுவதற்காக- முடியாது என்ற வார்த்தையைக் கூறாது, எல்லாம் செய்கிறாள். வளர்ந்து காரியாலயத்திலும், மேலதிகாரி அதிகமாக வேலை கொடுத்ததும், முடியாது என்று கூறமுடியாமல் வேலையைப் பாரமெடுக்கிறாள். இதனால் ஏற்பட்ட மனவேதனையே தலைவலிக்குக் காரணமாகியது.

**- எஸ்.ஜே. யோகராஜா**

(தொடரும்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள் அழிக்கல் ஆகா அரண்.

- திருக்குறள்

# நமது நோக்கு

## தமிழர் கல்விக்குத் தொடரும் புறக்கணிப்பும் அலட்சியமும்

நிரந்தர நியமனம் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையில் பந்தாடப்பட்டுவரும் தொண்டராசிரியர்கள் - இன்று தமக்கான பதிலை, உறுதியான வகையில் சம்பந்தப்பட்டவர்கள் தரவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து போராட்டத்தை நடத்துகின்றனர்.

தொண்டராசிரியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஆற்றியுள்ள, ஆற்றிவரும் பணியானது - ஆசிரியர் பற்றாக்குறையினால் பாரியளவில் பாதிக்கப்பட்டிருக்கும் வட - கிழக்கு மாகாணக் கல்வித்துறைக்குக் காலத்தால் செய்த மிகப் பெரும் சேவையென்றே கொள்ளத் தக்கதாகும்.

குறிப்பாக - யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும், பின்தங்கிய பிரதேசங்களிலும் இருந்து ஆசிரியர்கள் பலர் - பாதுகாப்பான பகுதிகளுக்கும், நகரங்களுக்கும் இடமாற்றம் பெற்றுச்சென்றபோது - தொண்டராசிரியர்களின் சேவையே - கற்பித்தலில் பெருமளவு இடைவெளி ஏற்பட்டுவிடாமலும், மாணவர்களின் கற்றலில் பாதிப்புத் தோன்றாமலும் பாதுகாக்கத் துணை புரிந்தது என்றால் - அது மிகையில்லை என்றே கூறலாம்.

இந்தவகையில் - வன்னிப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் - அங்கு தொண்டராசிரியர்களின் பணி மகத்தானதாக அமைந்திருப்பதை இன்னும் வலுவாகவே குறிப்பிடமுடியும்.

தகுந்த கற்பித்தல்சார் பயிற்சிகளின்றி இவர்களின் கற்பித்தல் பணி தொடர்ந்தும் - வருடக்கணக்கில் - அனுபவத்தின் மூலம் தொண்டராசிரியர்களின் கற்பித்தல் செயல்முறைகள் செம்மையடைந்ததையும், சிறப்படைந்ததையும் கல்வியியலாளர்கள் மறுக்கமாட்டார்கள்.

ஆனால் - மிகக் குறைந்த ஊதியத்தில் - நிறைவான சேவையைத் தந்த இவர்களுக்கான நிரந்தர நியமனம் மட்டும் - எட்டாக் கனியாகவும், வெறும் வாக்குறுதி மட்டத்திலுமே தொடர்வது, துரதிர்ஷ்டவசமானதோடு நியாயமற்றதுமாகும்.

இந்த நிரந்தர நியமன விவகாரத்தை வைத்து - தொண்டராசிரியர்களைச் சில அரசியல்சக்திகள் ஏய்த்துப் பிழைத்ததும் - வேதனை தரும் இன்னுமொரு விடயமாகும். நிரந்தர நியமனம் பெற்றுத் தருகிறோம் என ஆசை வார்த்தை கூறி - தொண்டராசிரியர்களைத் தேர்தல் பிரசாரங்களுக்கும், ஏன் வாக்குப்பதிவு நிலைய முகவர்களாகவும் வேலைசெய்யவைத்து - ஏமாற்றிய கதைகளைக் குடாநாடே அறியும்.

அதுபோக - ஆசிரிய சேவைக்கான உள்ளீர்ப்புக்கு பட்டதாரிகள் மற்றும் கல்விக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களும் காத்திருக்கும்போது, அவர்களுடன் போட்டியிடக்கூடிய கல்வித் தகைமைகளோ மேலதிக சான்றுப் பத்திரங்களோ தொண்டர் ஆசிரியர்களிடம் இல்லாதபோதும் - அவர்களது அர்ப்பணிப்பும், காலத்தின் தேவை கருதிய சேவையும் எவராலும் நிராகரிக்கப்படக் கூடியவையல்ல என்பதை நியாயமாகச் சிந்திக்கக்கூடிய எவரும் ஏற்றுக் கொள்ளவே செய்வார்கள்.

வட - கிழக்கில் ஆசிரியர் பற்றாக்குறை என்பது பூதாகரமானதொரு பிரச்சினையாக உருவெடுத்துள்ள நிலையிலும் தம்மிடம் நிதியில்லை என்ற காரணம் கூறி - ஆசிரிய நியமனங்களுக்குப் பின்னடித்துவரும் திறைசேரியின் போக்கினால், வட - கிழக்கின் கல்வி நிலையே பாதிக்கப்படும் சூழலில், தொண்டராசிரியர்களுக்கு இழைக்கப்படும் இந்த அநீதி அந்தப் பாதிப்பை இன்னமும் தீவிரப்படுத்தவே செய்கின்றது.

தென்பகுதிக்குத் தேவைக்கு அதிகமான ஆசிரியர் நியமனங்களை வழங்கிவிட்டு, நாடளாவிய ஆசிரிய நியமனத்திற்கான ஒதுக்கீடுகள் முடிவடைந்துவிட்டதாகக் கூறிவிட்டு, வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டிவரும் திறைசேரியின் செயற்பாடு படுமோசமானதும் கண்டிக்கத் தக்கதுமாகும்.

எனவே, அரசாங்கம் இந்த விவகாரத்தில் உடனடியாகத் தலையிட்டு தொண்டராசிரியர்களுக்கான நிரந்தர நியமனத்தை வழங்கி உதவுவதுடன்,

பற்றாக்குறையுள்ள வெற்றிடங்களை நிரப்ப, வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கும் தகுதியுடையோருக்கும் ஆசிரிய நியமனங்களை வழங்க முன்வர வேண்டியது அவசியமானதாகும்.

இல்லையேல் - தரப்படுத்தல் மூலமாக தமிழர்களின் கல்வி வாய்ப்புக்களை தட்டிப்பறித்த வரலாற்றுத் தவறுக்கும், துரோகத்தனத்துக்கும் எவ்விதத்திலும் குறைவில்லாததாகவே -

ஆசிரிய நியமனங்களில் காட்டப்படும் புறக்கணிப்பும் அதனூடாகத் தொடரும் தமிழர்கள் மீதான கல்விச் சிதைப்பும் கருத்திலெடுக்கப்படும்.

# இயல்புவாழ்க்கை, அமைதிச்சூழல் குறித்து அரசுடன் எத்தனைமுறை பேசியும் பயனில்லை!

## மாவை சேனாதிராஜா எம்.பி. அறிக்கை

(யாழ்ப்பாணம்)

மாறிமாறி வந்த அரசுகள் தமிழ்த் தேசிய இனத்தையே அழித்துவிடும் திட்டத்துடன் தமிழர் கல்வியைச் சிதைத்துவிடக் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக முனைந்து வந்திருப்பதாக - இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரினால் தமிழரின் கல்விக் கட்டடங்கள் அழிக்கப்பட்டபோதும், கல்விச் செல்வத்தைக் காப்பாற்றிவரும் தமிழ் ஆசிரிய சமூகத்தின் அளப்பரிய அர்ப்பணத்தை அனைவரும் அறிவோம். அதுவும் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் தென்னிலங்கையில் மேலதிகமாக நியமனம் பெற்று ஆதாயம் பெறுகின்றபோது, பத்தாயிரத்திற்கும் அதிகமான ஆசிரிய வெற்றிடங்கள் தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே நிரப்பப்படவில்லை. கல்வி மேம்பாட்டுக்கான வளங்கள் தமிழ்த்தேசத்தில், குறிப்பாக கிராமப்புறங்களில் வழங்கப்படவில்லை. பதவி உயர்வுகள், நிவாரணங்கள் திட்டமிட்டு வஞ்சிக்கப்படுகின்றன.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு ஓராண்டு கடந்தும், தமிழ் பேசும் மக்களின் இயலபுவாழ்க்கை மீளவில்லை. உயர்பாதுகாப்பு வலயம் எனும் இராணுவப் பிரகடனத்தினால் யாழ். குடாநாட்டில் 30 வீத நிலப்பரப்பில் இராணுவம் நிலைகொண்டுள்ளது. பொதுநிலங்களிலும், தனியார் வயல்நிலங்களிலும் இராணுவ மீள்குடியேற்றம் நடத்தப்படுகிறது.

சொந்த மண்ணிலிருந்து துரத்தப்பட்ட தமிழ்மக்களுக்கு மீள்குடியேற்றம், கடந்த பதினைந்து ஆண்டுகளாக மறுக்கப்பட்டு வருகிறது. தமிழ்த் தேசத்தில் கல்விக்கூடங்களில், கல்விச் சமூகத்தில், மாணவர்களிடத்தில் இயல்புவாழ்வோ, அமைதிச்சூழலோ இன்னும் ஏற்படவில்லை.

இவைபற்றியெல்லாம் அரசுடன், கல்வி அமைச்சுடன் எத்தனை தடவைகள் பேசியாகிவிட்டது.அரசு, ஆசிரியர் தொழிற்சங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில் எட்டிய உடன்பாடுகள் நிறைவேற்றப்படவில்லை. அவை பற்றிப் பேசுவதற்கே இழுத்தடிக்கப்படுகிறது.

இந்த நிலையில்தான் தமிழ்த் தேசத்துக் கல்விச் சமூகத்தின் வருங்கால நலன் கருதி அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்திற்கும், அமைதிப் பேரணிக்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறைகூவல் விடுத்துள்ளது.

தமிழ்த் தேசத்தின் விடிவிலும், தமிழ் பேசும் மக்களின் கல்வி மேம்பாட்டிலும் பற்றுக்கொண்ட அனைவரும் தமிழர் ஆசிரிய சமூகத்தின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கவேண்டும் என மாவை சேனாதிராஜா வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்காது!

(மன்னார்)

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து மீன்பிடிப்பதை எந்தவகையிலும் அரசாங்கம் அனுமதிக்கப் போவதில்லை என்று கடற்றொழில், நீரியல் வள அமைச்சர் மகிந்த விஜேசேகர தெரிவித்தார்.

மன்னார் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் குறித்து தகவல் வெளியிட்டபோதே அமைச்சர் மகிந்த விஜேசேகர இதனைத் தெரிவித்தார்.

இந்திய மீனவர்கள் இலங்கையின் கடல் எல்லைக்குள் நுழைவதைக் கட்டுப்படுத்துவது குறித்து இந்திய மத்திய அரசாங்கத்துடனும் தமிழக அரசாங்கத்துடனும் பேச்சு நடத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.





வடமராட்சியில் நேற்றுமுன்தினம் 'மாமனிதர்' குமார் பொன்னம்பலத்தின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திக்கு மக்கள் அஞ்சலி செலுத்துவதையும் பான்ட் அணிவகுப்புடன் நடந்த ஊர்திப் பவனியையும் படங்களில் காணலாம்.

# அரசாங்கத்தை பதவி கவிழ்க்க இதுவே சரியான தருணமாம்!

## தினேஷ் குணவர்த்தன கூறுகிறார்

அரசபடையினருடன் யுத்தம் நடந்தபோது, தமிழீழ விடுதலைப் புலிகளால் கொண்டுவர முடியாதுபோன பேரழிவு தரும் ஆயுதங்களை, யுத்தநிறுத்த காலத்தில் நாட்டுக்குள் கொண்டு வந்து சேர்த்துள்ளதாக மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரான தினேஷ் குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

மக்கள் ஐக்கிய முன்னணியின் 18 ஆவது தேசிய மாநாடு நேற்றுமுன்தினம் கொழும்பு நகர மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த மாநாட்டுக்குத் தலைமைதாங்கி உரையாற்றியபோது தினேஷ் குணவர்த்தன மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் அபிவிருத்தி என்ற பெயரில் ஐ.தே.மு. அரசாங்கம் மேற்கொண்டுவரும் அனைத்து நடவடிக்கைகளாலும் நாடு பெரும் அபாயத்திற்குள் சிக்கிப்போயிருக்கிறது.

இந்த அரசாங்கம் நாட்டைத் துண்டாடி, புலிகளுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை. இப்போது நாம் எமது தாய்நாட்டைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்துக்குள் சிக்கியுள்ளோம்.

அபிவிருத்தி என்ற பெயரில் வெளிநாடுகளிடம் கடனாகப் பெருந்தொகையான நிதி வாங்கப்பட்டு, புலிகளின் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதில் அரசு தீவிரமாக உள்ளது.

எமது நாட்டுக்கு அறிவுசார்ந்தோரை உருவாக்கும் பல்கலைக்கழகங்களையும், கிராமிய, நகரப்புறத் தோட்டப்புற பாடசாலைகளையும் மூடிவிட அரசு தீர்மானித்துள்ளது. சில பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டும் விட்டன.

அழிவுப் பாதையில் செல்லும் நாட்டைக் காப்பாற்ற இச் சந்தர்ப்பத்தில் அனைவரும் ஒன்றிணைந்து, புதிய ஆட்சி அமைப்பதற்காக இந்த அரசாங்கத்தைப் பதவி கவிழ்க்க வேண்டிய சரியான தருணம் இதுவேயாகும் என்றும் தினேஷ் குணவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டில் மகிந்த ராஜபக்ஷ, திலக் கருணாரட்ண, அனுரா பண்டாரநாயக்கா, டி.எம்.ஜெயரட்ண, ஃபேரியல் அஷ்ரப் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

# அரிய கடல்வாழ் உயிரினங்களை அழிக்கும் இந்திய மீனவர்கள் பயன்படுத்தும் வலைகள்

இந்திய மீனவர்களால் மன்னார் கடற்பரப்பில் பயன்படுத்தப்படும் வலைகள் இந்தியாவில் தடைசெய்யப்பட்டதெனவும், இவற்றைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதால் பவளப் பாறைகள், அரிய கடல்வாழ் உயிரினங்கள் அழிந்துபோகும் என்றும், இதனாலேயே இந்திய அரசு தமது கடல எல்லைக்குள் இந்த வலைகள் பயன்படுத்தப்படுவதைத் தடைசெய்திருப்பதாகவும் மன்னார் மீனவர் சங்கத்தலைவர் பாலசுந்தரராஜா தெரிவித்தார்.


இந்தியாவில் தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மன்னார்க் கடலில் மீன்பிடிப்பதுடன் இலங்கை மீனவர்கள் மீது தாக்குதலை நடத்தி வந்ததாகவும், இதனால் தாம் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தினமும் மன்னார்க் கடற்பரப்பில் நூற்றுக்கும் அதிகமான இந்திய மீன்பிடிப் படகுகள் ஊடுருவி வருவதாகவும் தெரிவித்த அவர், தமிழக அகதிமுகாம்களில் வாழும் ஈழத்தமிழ் மக்களின் நலன்கருதியே தாம், இதுவரை 'பேசாமலிருந்து' வந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வுத் திட்டம் ஸ்பெயின் அரசியலமைப்பில் சிறப்பம்சம்


*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

பிரஜைகளது இறைமையின்



ஸ்பெயின் நாட்டுத் தேசியக்கொடி

தேசியம் என்பது ஸ்பெயின் நாட்டின் அரசியற்திட்டத்திற்கே உரித்தான விசேட அம்சமாகும். இந்த விசேட அம்சத்தின் முழுப்பரிமாணமும் அங்கு கைக்கொள்ளப்பட்டதனாலேயே




பிராந்திய வேறுபாடுகளையும், முரண்பாடுகளையும்கொண்ட ஸ்பெயினில் தற்பொழுது சமாதான, சகஜ வாழ்வு நிலையைப் பேணுகிறது.

இந்தவகையில் "பிரஜைகளது இறைமையின் தேசியம்" என்பது என்ன என்று ஆராய்வோமானால், அந்நாடு பொருளாதார ரீதியாக அபிவிருத்தி அடைந்தநாடு என்ற அடிப்படையில், அதன் இறைமை பாதுகாப்படுகிறது. ஸ்பெயினின் வெளியக இறைமையானது எவ்வித அச்சுறுத்தல்களுக்கும் அல்லது நெருக்கடிகளுக்கும் உள்ளாகாமல் இருப்பதனாலும், அதனைவிட எந்தவொரு நாட்டிலும் தங்கியிருக்காமல் இருப்பதனாலும் அதன் வெளியக இறைமை பாதுகாக்கப்படுகிறது.

இவ்வாறு பாதுகாக்கப்படும் இறைமையை சிறுபான்மை, பெரும்பான்மை என்ற வேறுபாடு இல்லாமல - மதரீதியான, இனரீதியான வேறுபாடு இல்லாமல் - குறிபபாக ஸ்பெயினைப் பொறுத்தவரையில் புவியியல் ரீதியான பிராந்திய வேறுபாடுகள் இல்லாமல் - மக்களின் இறைமையாகப் பயன்படுத்தியதால் அந்நாடு ஒவ்வொரு பிரஜையையும் இறைமையுள்ள பிரஜையாகப் பாதுகாத்து வைததிருக்கின்றது.

அவ்வாறு பாதுகாக்கப்பட்டிருக்கும் பிரஜைகளது இறைமையின் கூட்டுவடிவமே தேசியமாகக் கருதப்படுகிறது. இதற்கு இணைந்த விதத்தில் - சமாந்தரமாகத் தனிமனித உரிமைகள், மனித உரிமைகள், கலாசார, மொழி, மத உரிமைகள் சட்டரீதியாகப் பாதுகாக்கப்பட்டுவருகின்றன.

## ஸ்பெயின் நாட்டினது பிராந்திய முறைமை

ஸ்பெயினது பிராந்தியங்களை ஆராய்வோமானால் - கட்டலோனியா (catalonia), யுஸ்காடி (Euskadi), ஹலிசியா (Galicia) என்று மூன்று பிராந்தியங்களும், பதினேழு சுயாட்சி இனக்குழுக்களும் (Autonomons com munities) இணைந்த வகையில் காணப்படுகின்றன.

இந்த மூன்று பிராந்திய மாநிலங்களிலும் 17 சுயாட்சி இனக்குழுக்களின் பிரதிநிதிகளும் இணைந்தவகையில், ஸ்பெயின் நாட்டினது மேறசபை காணப்படுகிறது. அதனைவிட சபைக்கு நேரடியாகத் தேர்தல் நடைபெற்று உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இவ்வாறு மேற்சபை, கீழ்ச்சபை என இரட்டை சபைகளைக் கொணட (Two chambers) மத்திய அரசாங்கம் அந்நாட்டின் ஜனநாயகத்தினையும், சமூக விடுதலையையும், சமூக நீதியையும், சமத்துவத்தையும், அரசியல பனமைத்துவத்தினையும் பாதுகாத்து வருகின்றது. அது எவ்வாறு பாதுகாத்துவருகின்றது என்றால் - பிராந்திய, மாநில அரசாங்கங்களின் நல்லாட்சியின் மூலமாகவே அதனை நடைமுறைப்படுத்தி வருவதனை நாம் விசேடமாக அவதானிக்க வேண்டும்.

இதனைச் சுருங்கக் கூறுவோமாயின் - மத்திய அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானத்தினையும், சட்டத்தினையும் பிராந்திய மாநிலங்களும், இனக்குழுக்களின் சுயாட்சிச் சபைகளும் நடைமுறைப்படுத்தி வருவதனை இங்கு காணலாம். இவ்வாறான விசேடமான தன்மை ஜேர்மனிய அரசியற்திட்டத்திலும் காணப்படுகிறது. ஆனால், ஜேர்மனியில் ஒருமைப்பாடுடைய ஒத்த சமூகங்களே பதினாறு சமஷ்டிகளிலும் வாழ்கின்றன. ஆனால், ஸ்பெயினில் பன்மைத்துவப்பாடுடைய சமூகங்கள் வாழ்வதனை நாம் கூர்ந்து அவதானிக்க வேண்டும்.

## பிராந்திய ரீதியான ஆராய்ச்சி நிறுவனங்கள்

மேற்சொன்ன அடிப்படையில், மத்தியில் கொள்கை வகுக்கப்படுகின்றபோதும், ஒவ்வொரு பிரதேசத்திற்கும், ஒவ்வொரு சுயாட்சிக் குழுக்களுக்கும் தத்தமது வாழ்வினை, கலாசாரத்தினை பொருளாதாரத்தினை மேம்படுத்த எதிர்வரும் காலங்களில் எவ்வாறு தொழிற்படவேண்டும் என்பதனை, மத்திய அரசாங்கத்தால் நிதியிடப்பட்ட பல் கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்ட "பிராந்திய ஆராய்ச்சி நிறுவனங்கள்" தீர்மானம் செய்கின்றன. இவற்றின் ஆய்வறிக்கையின் அடிப்படையிலேயே மத்திய அரசாங்கத்தில் கொள்கை வகுப்புக்கள் மற்றும் சட்டவாக்கல் நடைபெறுகின்றது.

## 1978 ஆம்ஆண்டு அரசியற்திட்டம்

ஸ்பெயின், தனக்கு வேண்டிய அரசியற்திட்டத்தினை உருவாக்க 15 ஆம் திகதி ஜூன் மாதம் 1977 ஆம் ஆண்டு அரசியற்திட்ட உருவாக்கச் செயற்பாட்டில் இறங்கியது.

1978 ஆம் ஆண்டு தனக்குரிய


### சுயநிர்ணயம் ஒரு பார்வை பகுதி - 24

ஜனநாயக மரபுகளைப் பேணும் வகையில், கொண்டமைந்த அரசியற் திட்டத்திற்கு முன்னர், அந்நாட்டின் நிலவிய முடியாட்சி முறைமைகள் ஒரு முடிவிற்கு வந்தன. மன்னன் சம்பிரதாயபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒரு நபராக மட்டுமே தற்பொழுது காணப்படுகிறார். ஆனால், இவ்வரசியல் திட்டத்திற்கு முன்னர் ஸ்பெயினில் முடியாட்சியே நிலவியது.

அரசியற்திட்டத்தினை உருவாக்கவென "அரசியற்திட்ட விவகாரக் குழு" (Constitutional Affairs Commission) என்ற 36 அங்கத்தவர்களைக் கொண்ட குழுவை உருவாக்கி - புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள், பாடசாலை ஆசிரியர்கள், தொழிற்சங்கவாதிகளின் ஆதரவுடன் மக்கள் அபிப்பிராயம் கேட்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு மக்கள் தமக்கு எவ்வாறான அரசியற்திட்டம் தேவையென்பதனையும், தாம் எவ்வாறு ஒரு நல்லாட்சிக்கு உட்படுத்தப்பட விரும்புகிறோம் என்பதனையும் அறிந்து, அதற்கு ஏற்றவிதத்தில் அரசியற்திட்டத்தை உருவாக்குவதறகு அங்குநிலவிய வரலாற்றுக் காரணிகளும், வெவ்வேறான கலாசாரக் காரணிகளுமே காரணமாகும். மேலும் பல கலாசாரங்களையும், பன்மைத்துவத்தினையும் கொண்டமைந்த அந்த நாட்டில், தனி மனிதரது உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் எனக் கரிசனை நிறையவே இருந்ததாக அரசியற்திட்ட விவகார ஆணைக்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தனிமனித உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றது எனக் கூறப்பட்டபோதும், ஸ்பெயினது தேசியவாதம் மிகவும் கருத்துன்னிப்பாக வலியுறுத்தப்பட்டுள்ளதனையும், 1978 ஆம் ஆண்டு அரசியற்திட்டத்தில் காணமுடிகிறது. இதற்கு ஸ்பெயினது பிராந்தியங்களின் வரலாற்றைப் பார்த்தால், அவை வரலாற்று ரீதியாகத் தனியரசுகளாக இருந்த பின்புலத்தைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. எனவே, ஸ்பெயினது பிராந்தியங்கள் பின்னொரு காலத்தில் பிரிந்து சென்றுவிடக்கூடாது என்பதற்காகவே சமஷ்டித் தத்துவங்கள் அந்த அரசியற்திட்டத்தில் பின்பற்றப்பட்டபோதும், "ஒற்றையாட்சி" என்ற விடயத்தினை வலியுறுத்தி, அரசியற்திட்ட வல்லுநர்கள் ஸ்பெயினின் அரசியற்திட்டத்தினை வரைந்துள்ளனர் என நம்பப்படுகிறது.



ஸ்பெயின் ஜனாதிபதி ஜோஸ் மரியா அஸ்னல் லோபஸ்

1978 ஆம் ஆண்டு அரசியற்திடடத்தின் பின்னர் பிராந்தியங்களுக்கான அதிகாரங்களை பகிரும் செயற்பாடுகள் ஸ்பெயினில் நடைபெற்றுள்ளன. இவ்வாறு பகிரப்பட்ட அதிகாரங்கள் பிராந்தியங்களில் சுயாட்சியினை உறுதிசெய்யுமளவிற்கு மொழி, கலாசார, புவியியல் ரீதியாக வரையறுக்கப்பட்டு, பிராந்திய ஆட்சி நடைபெறுவதனை அரசியற்திட்டம் உறுதிசெய்கின்றது.



தலைநகர் மட்ரிட்ரின் ஒரு தோற்றம்.

## சமச்சீரற்ற அதிகாரப்பகிர்வு

(Asymmetric Devolutional Power)

ஸ்பெயினது பிராந்தியங்கள் எல்லாவற்றிற்கும் ஒரேதரத்திலான அதிகாரங்களை ஸ்பெயினது மத்திய அரசாங்கம் கையளிக்கவில்லை. மாறாக, ஒரு பிராந்திய அசிற்கு அதன் வரலாறு, சனத்தொகை மற்றும் சமூக, கலாசார, அரசியற் தன்மைகளுக்கு ஏற்பவும் பிராந்தியங்கள் அதிகாரங்களைக் கோரியதற்கிணங்

**வேலும்மயிலும் சேந்தன்**

கவுமே வெவ்வேறு தரத்திலான அதிகாரங்களைச் சமச்சீரற்ற முறையிலே வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சமூகத்தினையும், ஒவ்வொரு அலகாகக்கொண்டு இப்பிராந்திய அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

*(பிரதி செவ்வாய்தோறும் தொடரும்.)*

---

## பருத்தித்துறை பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட வாகனத்தை மீளப்பெற உதவுமாறு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

பருத்தித்துறை பிரதேசசபைக்கு - உள்ளூராட்சித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட "பிக்கப்" வாகனத்தை, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரிடமிருந்து மீளப்பெற்றுத் தருமாறு பிரதேசசபைச் செயலாளர்- பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பிரதேசசபையின் பதவிக்காலம் முடிவதற்கு முன்னராக, 3 மாத விடுமுறையில் கொழும்புக்குச்செல்லும் போது, வாகனத்தின் பாதுகாப்புக் கருதி, கட்சியின் தலைமை அலுவலகத்தில் ஒப்படைத்துவிட்டு வந்ததாகவும், தற்போது பிரதேசசபையின் பதவிக்காலம் முடிவடைந்துளளதால், கட்சியின் தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு வாகனத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் முன்னாள் பிரதேச சபைத் தலைவர்- இந்தியாவிலிருந்து தொலைபேசி மூலம் அறிவித்திருந்தார்.

இது தொடர்பாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகத்துடன் கடித மூலம் தொடர்புகொண்டபோதும்- அதற்குப் பதிலோ, வாகனமோ இதுவரை கிடைக்காததால் - பிரதேசசபைச் செயலாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (17)

## நிக்கொட் செயற்திட்டத்தின் கீழ் மருதங்கேணியில் மருத்துவமனை

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் "நிக்கொட்" செயற்திட்டத்தின் கீழ் மருதங்கேணியில் மருத்துவமனை ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

மேற்படி வைத்தியசாலையை அமைப்பதற்கான முதற்கட்ட ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ளன.

அடுத்த கட்டமாகக் கட்டட வேலைகளுக்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. மிகவிரைவில் கட்டடப் பணிகள் ஆரம்பமாகவுள்ளன.

## அறுவடைசெய்த நெல்லை களஞ்சியப்படுத்த முடியாதநிலையில் மன்னார் விவசாயிகள்

மன்னாரில் நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள், நெல்லைக் களஞ்சியப்படுத்த வசதியின்றி இருபதால் - தற்காலிகமாகக் களஞ்சியப்படுத்துவதற்குக் கொள்கலன்களை வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கைவிடுக்கப்பட்டிருக்கிறது.

விவசாய அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவுக்கு மன்னார் விவசாயிகள் அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இம்முறை மன்னாரில் 50 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டிருந்தது. இந்த நெல்லைக் களஞ்சியப்படுத்துவதற்குப் போதிய வசதிகள் இல்லாமல் விவசாயிகள் திண்டாடுகின்றனர்.

முன்னர் - முருங்கன், திருக்கேதீஸ்வரம், அடம்பன், இரணை இலுப்பைக்குளம், நானாட்டான், சிலாவத்துறை ஆகிய இடங்களில் நெற்களஞ்சியங்கள் இருந்தன. ஆனால், இப்போது முருங்கனில் மட்டுமே நெற்களஞ்சியச்சாலையுள்ளது. ஏனைய களஞ்சியச்சாலைகள் யுத்தத்தினால் அழிவடைந்துள்ளன.


இதனால் நெல்லைக் களஞ்சியப்படுத்தி வைக்கக்கூடிய பாரிய கொள்கலன்களை இஸ்ரேலிலிருந்து பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

## சக்கோட்டை புனித சவேரியார் உற்சவம்


சக்கோட்டை புனித சவேரியார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 4 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது.

நாளை முதல், நாளை மறுநாள் அதிகாலைவரையும் ஆராதனை நடத்தப்பட்டு உற்சவம் நிறைவு பெறும்.


ICC Cricket World Cup
SOUTH AFRICA 2003



# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## Sheperd கைய வச்சா


புன்னகையுடன் ஷெப்பார்ட்

கிரிக்கெட் போட்டிகள் என றாலே சட்டென்று மனதில் நிற்பவர்கள் மத்தியஸ்தர்கள் தான். ஏனென்றால் அவர்கள் கொடுக்கின்ற தீர்ப்பு, தூக்குத் தண்டனைக் கைதியை விடுவிக்கும். நிரபராதியைத் தூக்குத் தண்டனைக்கு அனுப்பும்.

அந்த வகையில் இன்று காணப்படுகின்ற UMPIRES வரிசையிலே டேவிட் ஷெப்பார்ட் OLD IS GOLD தான். கிட்டத்தட்ட இவருக்கு 62 வயது இருக்கும். அருமையான முகப்பொலிவு. வயிற்றின் கீழே ஏறி இறங்குகின்ற நீளக்காற்சட்டை, COOLING GLASS. சிலவேளைகளில் CAP. திலே டேவிட் ஷெப்பார்ட் விடுகின்ற மிமிக்ரிக்கும், பகிடிகளுக்கும் அளவே இல்லை என்று கிரிக்கெட் ஆட்டக்காரர்களே கூறுவர். DRESSING ROOM இல் வைத்து இவர் விடுகின்ற JOKES எல்லாம் இளம் வீரர்களை குதூகலப்படுத்தக்கூடியன.

ஆனால், மைதானத்தில் எல்லா வீர்களாலும் GRANDPA என்று மதிக்கக்கூடிய மத்தியஸ்தர் டேவிட்தான். ஒரு முறை ஒரு டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அதிவேகப்பந்து வீச்சாளர் (உயரம் 6 அடிக்கு


ஷெப்பார்ட் - வக்கார் Warning!

## அது Wrong ஆப் போனதில்லை

ஆனால், HAT தான் கூட. எப்பொழுதும் முகத்தில் ஒரு புன்சிரிப்பு. ஆனால், அது எப்பொழுது கடுகாக வெடிக்கும் எனத் தெரியாது. மைதானத்தில் ஆடுகளத்திலே ஒரு அலாதியான சுறுசுறுப்பு. இவற்றுக்கெல்லாம் சொந்தக்காரன்தான் டேவிட் ஷெப்பார்ட்.

ஆரம்பத்திலே டேவிட் ஷெப்பார்ட், டிக்கி பேர்ட் ஜோடி என்றால் மைதானமே கிடுகிடுக்கும். ஏனெனில், கிரிக்கெட் மைதானத்திலே வீரர்களைத் தங்களுடைய திறமையினால் கட்டிப்போடக்கூடிய அற்புதமான மத்தியஸ்தர் ஜோடி. அந்தக் காலத்தில் 3 ஆம் நடுவர் (TV) உடைய செல்வாக்கு அவ்வளவாக இல்லாத நேரத்தில்கூட, நியாயமான, அற்புதமான, துல்லியமான தீர்ப்புக்களைக் கொடுத்து கிரிக்கெட் போட்டிகளை நன்கு சுவாரசியப்படுத்திய மத்தியஸ்தர் ஜோடி இது. எவ்வளவு கடுமை இருந்தாலும் மைதானத் மேல்) கேர்ட்லி அம்புறோஸ் இவரைக் கட்டி அணைத்து முத்தமிட்டதைப் பார்க்கும்போது, இவர் எந்தளவுக்கு விளையாட்டு வீரர்களுடன் நெருக்கமானவர் என்பதைக் காணலாம்.

இந்த உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தான் அணியின் வக்கார் யூனிஸுக்கு விழுந்த டோஸ், இவருடைய GROUND DECIPLINE இற்கு நல்ல உதாரணம். NO BALL விடயத்தில் மிகவும் கடும்போக்கான மத்தியஸ்தர் என இவர் வர்ணிக்கப்படுகின்றார்.

மத்தியஸ்தர்களை ஏமாற்றும் முறையீடுகள், ஆட்டத்தினைக் குழப்பும் செயற்பாடுகள், வீரர்களைக் கெட்ட வார்த்தைகளால் திட்டுதல், நேரத்தைக் கடத்துதல் ஆகிய செயற்பாடுகளை அறிந்தால், ஐயா கிழி கிழி என்று கிழித்து விடுவார். தற்போதைய கிரிக்கெட் ஆட்டங்களில் ஒற்றை விரலைத் தூக்குவதில் முன்னிற்கின்ற இளம் மத்தியஸ்தர்களுடன் ஒப்பிடும் போது, இவர் 22 கரட் தங்கம்தான்.




ஷெப்பார்ட் - ரசிகர்.

அடுத்த WORLD CUP என்பது OLD MAN ஷெப்பார்ட்டிற்கு மிகவும் கடினமான ஒன்றாகத்தான் இருக்கும். ஆனால் இவருடைய இழப்பு பேரிழப்பாகத்தான் இருக்கும். STOMACH - MAN, SHOW YOUR COLOURS.

- P.N.சுதர்சன்.




## தூரத்து இடி முழக்கம்


அவுஸ். எதிர் நியூசிலாந்து - சோபிக்குமா?

SUPER SIX ஆட்டங்கள் எல்லாமே ஏதோ ஒருவகையில் SUPER ஆகவே அமைந்திருந்தன. வெற்றி தோல்விக்கப்பால் ஒவ்வொரு அணியும் அல்லது யாரோ ஒரு வீரரும் பதிவுகளை மனதில் ஏற்படுத்தியே சென்றுள்ளனர். அந்தவகையில் இன்றைய ஆட்டமும் அந்த மாதிரியாகவே அமையலாம். இன்று சந்திப்பவர்கள் KIWI பறவைகளும் KANGAROO க்களும். அவுஸ்திரேலியர்களும் கங்காரு தன் குட்டியை வயிற்றில் பொத்திப் பொத்தி வைத்திருப்பதைப்போல் வெற்றியையும் தமக்கு மட்டுமே உரியதென்று உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்பால் நியூசிலாந்து அணியும் தத்தித் தத்தி பிளெமிங்கின் தலைமையில் தெரியக் கூடியநிலைக்கு வந்துவிட்டார்கள். முதல் சுற்றில் ஆறு போட்டிகளிலும், SUPER SIX இல் முதலாவது போட்டியிலும் அவுஸ்திரேலியா வெற்றி.

இதேவேளை - நியூசிலாந்து இலங்கையுடன் தோல்வி, கென்யாவுடன் ஆட்டம் நடைபெறவில்லை. நான்கு ஆட்டங்களில் வெற்றி. SUPER SIX இல் சிம்பாப்வேயுடன் வெற்றி. எண்ணிக்கை அடிப்படையில் பெரிய வித்தியாசங்கள் இல்லையாயினும், அவுஸ்திரேலியா நியூசிலாந்தை விடப் பலமான அணி என்பது உண்மை. நியூசிலாந்தின் பக்கத்தில் பிளெமிங், கிறிஸ் கெயின்ஸ், ஷேன் பொண்ட் என்று நட்சத்திரப் பெயர்களைச் சுட்டிக்காட்டலாம். ஆனால் அவுஸ்திரேலியா அத்தனையும் நட்சத்திரங்கள். இன்னொரு சுவையான அவதானம் - மார்க் வோ, ஸ்ரீவ் வோ, ஷேன் வோண், ஷேன் வட்ஸன், ஜிலெஸ்பி போன்றவர்கள் அணியில் இல்லை என்பது இந்தச் சுற்றுப் போட்டியில் எப்பொழுதும் உணரப்படவேயில்லை. ஆனால் அவுஸ்திரேலிய அணியின் திறமைக்கு குத்தி எழுப்பும் பாணி தேவையில்லையே. பூப்பறிக்க கோடரி எதற்கு?

ஆட்டம் நடைபெறும் மைதானம் ST.GEORGE`S PARK PORT ELIZABETH. இரு அணிகளுக்கும் இந்த மைதானத்தில் ஒவ்வொரு ஆட்ட அனுபவம் உண்டு. இருந்தாலும், இங்கிலாந்து அவுஸ்திரேலியாவை மடக்கியது இங்குதான். (இது உண்மையான நாடகமா?)

என்றாலும்கூட, அவுஸ்திரேலியா தன் வெற்றி SPREE ஐ விட்டுவிட எண்ணாது. ஆகவே, அநேகமாக வெற்றி அவுஸ்திரேலியாவின் பக்கம்தான் இருக்கும். நியூசிலாந்து தன் உச்சத்திறமையைக் காட்டவே முயற்சிக்கும். இங்கு இன்னொன்றையும் அவதானிக்க வேண்டும். பிரெட் லீ, மக்ராவுடன் ஷேன் பொண்ட் ஒப்பிட்டுப் பேசப்படுபவர். ஷேன் பொண்ட் முத்திரை பதித்துவரும் வேகப்பந்துவீச்சாளர். அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர்கள் தங்களை வேகப்பந்து வீச்சின் பிதாமகர்களாக தமக்குள் எண்ணிக் கொண்டிருப்பவர்கள். ஷேன் பொண்ட் துலங்க அவுஸ்திரேலியத் துடுப்பாட்ட வரிசை அனுமதிக்குமா என்பதும் ஒரு கேள்விதான்.

இரு அணிகளுக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. கறுப்பின, மூன்றாம் உலக நாடுகளைக் கொச்சைப்படுத்தும் பாங்கில், 'காமாலைக் கண்ணராக' புலம்பிக் கொண்டிருப்பதே அந்த ஒற்றுமை. பரவாயில்லை. உங்களுக்கும் எங்களுக்கும் வித்தியாசம் இருக்க வேண்டாமா?

நாங்கள், நீங்கள் இரு அணிகளும் தரவிருக்கும் கிரிக்கெட் விருந்தைச் சுவைக்கத் தயாராக இருக்கிறோம். இந்த ஆட்டத்தின் மத்தியஸ்தர்கள் அசோகா டீ சில்வா மற்றும் ஸ்ரீவ் பக்னர். ஆட்ட மத்தியஸ்தர் ரஞ்சன் மடுகல்ல. TV UMPIRE ஜேர்லிங். நான்காவது UMPIRE கோர்ட்சன். மத்தியில் நிற்கப் போகிறவர்கள் எங்கள் ஆட்கள். உங்களுக்கு ஏதும் பயங்கரவாதக் கனவு, அச்சம், பாதுகாப்பின்மை போன்ற நோய்கள் வராதுதானே?

- ஜோசப் கிருஷ்ணா -

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### இந்தியா எதிர் இலங்கை அணி

**இந்திய அணி**

| | | |
|---|---|---|
| டெண்டுல்கர் | C சங்கக்கார b டீ சில்வா | 97 |
| ஷேவாக் | C டீ சில்வா b முரளி | 66 |
| கங்கூலி | b வாஸ் | 48 |
| கைஃப் | b முரளி | 19 |
| யுவ்ராஜ் சிங் | b வாஸ் | 05 |
| டிராவிட் | N0t out | 18 |
| மொங்கியா | C டீ சில்வா b முரளி | 09 |
| ஹர்பஜன் சிங | N0t out | 07 |
| உதிரிகள் | | 23 |
| மொத்தம் 6 விக்கெட் இழப்புக்கு (50 ஓவர்கள்) | | 292 |

**பந்து வீச்சு - இலங்கை அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| வாஸ் | 10 | 2 | 34 | 2 |
| நிஸ்ஸங்க | 6 | 0 | 49 | 0 |
| பெர்ணான்டோ | 10 | 1 | 61 | 0 |
| முரளி | 10 | 0 | 46 | 3 |
| ஜயசூரிய | 3 | 0 | 27 | 0 |
| டீ சில்வா | 6 | 0 | 32 | 1 |
| ஆர்னல்ட் | 5 | 0 | 30 | 0 |

**இலங்கை அணி**

| | | |
|---|---|---|
| அத்தபத்து | C கைஃப் b சிறிநாத் | 00 |
| ஜயசூரிய | C கைஃப் b சிறிநாத் | 12 |
| முபாரக் | C டிராவிட் b சிறிநாத் | 00 |
| ஜெயவர்த்தன | LBW b ஷாகிர் கான் | 00 |
| டீ சில்வா | LBW b சிறிநாத் | 00 |
| சங்கக்கார | C யுவ்ராஜ் b நெஹ்ரா | 30 |
| ஆர்னல்ட் | LBW b ஷாகிர் கான் | 08 |
| வாஸ் | C டென்டுல்கர் b நெஹ்ரா | 09 |
| நிஸ்ஸங்க | C கைஃப் b நெஹ்ரா | 00 |
| பெர்ணான்டோ | N0t out | 13 |
| முரளி | C கைஃப் b நெஹ்ரா | 16 |
| உதிரிகள் | | 21 |
| சகல விக்கெட்டுக்களையும் இழந்து (23 ஓவர்கள்) | | 109 |

**பந்து வீச்சு - இந்திய அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| ஷாகிர் கான் | 7 | 0 | 33 | 2 |
| சிறிநாத் | 9 | 1 | 35 | 4 |
| நெஹ்ரா | 7 | 1 | 35 | 4 |

இந்திய அணி இலங்கை அணியை 183 ஓட்டங்களால் வெற்றிகண்டது.

## நாளும் ஒரு வினா

2007 இல் மேற்கிந்தியத்தீவுகளில் உலகக்கிண்ணப் போட்டிகள் நடைபெறும்போது தனது நாட்டிலும் சில போட்டிகளை நடாத்த ஆசைப்படும் நாடு எது?

ஐக்கிய அமெரிக்கா

உலகக் கிண்ணக் கிரிக்கெட்
அனுசரணை

இலங்கையின் நம்பர் 01 கம்பனி "பிஸினஸ் ருடே" சஞ்சிகை
(Business Today Magazine).
இலங்கையின் தலைசிறந்த வங்கி- 'குளோபல் பைனான்ஸ், த பாங்கர் சஞ்சிகை'
(Global Finance, The Banker Journal)
எமது மிகப்பரந்த கணனி வலை அமைப்புக்குள் (Comnet) யாழ்ப்பாணமும் இணைந்துள்ளது.
கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகளிடம் ஒப்படைக்கும் சமாதானம் பயனற்றது

## அரசு மீது ஜே.வி.பி. பாய்ச்சல்



(கொழும்பு)
சமாதானம் என்ற பசப்பு வார்த்தையை முன்வைத்து, நாட்டுக்கு துரோகமிழைக்கப் பிரதமர் முனைந்து வருகிறார்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

அனைத்தையும் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கும் சமாதானத்தினால் நாட்டுக்கு எந்தப் பலனும் ஏற்படப் போவதில்லை என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. இணைந்து நேற்று நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியின் முடிவில் நடந்த கூட்டத்திலேயே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றியபோது,

முல்லைத்தீவில் இடம்பெற்ற சம்பவம் மூலம் புலிகள் போருக்கான ஏற்பாடுகளைச் செய்வது தெரியவந்துள்ளது. கனரக ஆயுதங்களும் ஏவுகணைகளும் முல்லைத்தீவிற்கப்பால் சர்வதேச கடற்பரப்பில் இறக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அது பற்றி பாதுகாப்பு அமைச்சருக்கோ அல்லது அமைச்சின் செயலாளருக்கோ எதுவும் தெரியாது என்றும் அவர் கூறினார்.

முப்படைத்தளபதிகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் ஜனாதிபதியிடமே உள்ளது. ஆனால் அந்த அதிகாரங்களை பிரதமர் ரணில் தன்வசப்படுத்தி புலிகளுக்குச் சாதகமாகச் செயற்படுகின்றார் என்றும் அவர் கூறினார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அனுரா பண்டாரநாயக்க கருத்துத் தெரிவிக்கையில் -

ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்து தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவுடன் அரசாங்கம் ஒன்றை நிறுவப் போவதாகத் தெரிவித்தார்.

நாட்டுக்குச் சிறப்பாகச் சேவையாற்றிய ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாச ஆகியோருக்கு இருந்த தூரதரிசனம் தற்போதைய அரசாங்கத்துக்குக் கிடையாது என்றும் அவர் கூறினார்.

நேற்று நடந்த பேரணியில் பெருமளவு பௌத்த பிக்குகள் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

(க)

### உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

ICC Cricket World Cup South Africa 2003

SUPER SIX நான்காம் நாள்

அவுஸ்திரேலியா Vs நியூசிலாந்து - ST.GEORGE'S PARK. PORT ELIZABETH - 2 pm.

### திருமலையில் கைதான

## ஆறு போராளிகளையும் விடுவிக்க மேன்முறையீட்டு நீதிமன்று உத்தரவு

(திருமலை)
கடந்த நவம்பர் மாதம் திருகோணமலை சம்பூர் கடற்பரப்பில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட, விடுதலைப் புலிகள் ஆறு பேரையும் பிணையில் விடுதலை செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

அவர்களை விடுதலை செய்வது தொடர்பாக சட்டமா அதிபர் இணக்கம் தெரிவித்த பின்னர், இந்தத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொருவரும் 25 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாதத்தின் கடைசி சனிக்கிழமைகளில் திருகோணமலைப் பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திடுமாறு நீதிமன்றம் தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

## கடற்படையினரின் பணமும் பிரமுக வங்கியில் முடக்கம்

(கொழும்பு)
கடற்படை உத்தியோகத்தர்களின் நலன்புரிச் சங்கத்துக்குச் சொந்தமான, மூன்றரைக்கோடி ரூபா பிரமுக வங்கியில் வைப்பிலிட்டது தொடர்பாக, கடற்படையைச் சேர்ந்த பல அதிகாரிகள் லஞ்ச விசாரணைக் குழுவினரால் விசாரிக்கப்படவுள்ளனர்.

கடற்படைத் தளபதி தயா சந்தகிரியின் அனுமதியின்பேரில் சங்கத் தலைவரால் இந்தப் பணம் பிரமுக வங்கியில் வைப்பிலிடப்பட்டது.

தங்களது சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட இந்தப் பணத்தினால் பெறவேண்டிய நன்மைகள் கிடைக்காததால் ஏமாற்றமடைந்துள்ளதாகக் கடற்படை உத்தியோகத்தர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(க)

## அரசும் தன் பலத்தைக் காட்ட கண்டியில் புதனன்று கூட்டம்

### பிரதமர் ரணிலும் கலந்துகொள்கிறார்

(கொழும்பு)
அரசாங்கத்தின் பலத்தை வெளிக்காட்டும் பொருட்டு எதிர்வரும் 12 ஆம் திகதி கண்டியில் கூட்டம் ஒன்றை நடத்துவதற்கு ஐக்கிய தேசிய முன்னணியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதார அபிவிருத்தி பற்றி உரையாற்றவுள்ளார்.

இப்படியான கூட்டங்களை மாவட்ட மட்டத்தில் நடத்துவதற்கும் ஐக்கிய தேசிய முன்னணியின் செயற்குழு தீர்மானம் எடுத்துள்ளது.

இதன் முதற் கூட்டம் அடுத்த மாதம் 28 ஆம் 29 ஆம் திகதிகளில் மாத்தறையில் நடைபெறவுள்ளது.

### களுத்துறை...

பொ.கஜேந்திரகுமார் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

நேற்றுக்காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகிய அடையாள மறியற் போராட்டம் 11.45 மணிக்கு நிறைவடைந்தது. இதில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் பங்குகொண்டிருந்தனர்.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளை விடுவிக்கக் கோரும் வகையில், அங்கு பல சுலோகங்கள் கொண்ட பதாகைகளை மறியற் போராட்டத்தில் பங்குபற்றியவர்கள் தாங்கியிருந்தனர்.

இப்போராட்டம் காரணமாக பிரதான வீதியில் வந்த வாகனங்கள் யாவும் வேறு பாதையில் திருப்பி விடப்பட்டன. அத்துடன் பொலிஸாரும் பாதுகாப்பில் ஈடுபட்டனர். இப்போராட்டத்தில் மாவை சேனாதிராசா, விநாயகமூர்த்தி, சிவாஜிலிங்கம், பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சூ.சிறில் ஆகியோர் உரையாற்றினர்.

சிவாஜிலிங்கம் தனதுரையில், இப்போராட்டத்தை அரசு உதாசீனம் செய்தால், அது நாடாளுமன்றத்திற்கும் விரிவுபடுத்தப்படும் என்றார்.

(60,லி,ரா)

### யுத்தநிறுத்த...

தமும் நிகழாமல் தமது குழு பார்த்துக் கொள்ளும் என, கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சன் உறுதிபடக் கூறியிருந்தார் என்றும் தமிழ்ச்செல்வன் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எமது போராளிகளான கப்பல் கப்டன் உட்படப் பதினொருபேர் கொல்லப்பட்டுள்ளனர். கடற்படைத் தாக்குதலில் எமது கப்பல் தீப்பற்றிக் கடலில் மூழ்கியுள்ளது.

இது சமாதான முயற்சிகளுக்கு ஊறு விளைவிக்கும் ஒரு சம்பவமாகும். போர் நிறுத்த உடன்பாடு அமுலில் இருக்கும் சமயத்தில், கடற்படை இத்தகைய பல ஏற்றுக் கொள்ளமுடியாத நடவடிக்கைகளை விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளுகின்றது. இது குறித்து எமது அதிருப்தியை அரசிடம் எடுத்துக்கூறுங்கள் எனத் தமிழ்ச்செல்வன்- பாதுகாப்பு அமைச்சர் மாரப்பனவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## மன்னாரில் மீனவர்கள் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி



(மன்னார்)
மன்னாரில் நேற்று நடைபெற்ற பெரும் ஆர்ப்பாட்டப் பேரணியில், மூவாயிரத்துக்கும் மேற்பட்ட கடற்தொழிலாளர்கள் கலந்துகொண்டனர்.

மன்னார் வளைகுடாவில் தமிழக மீனவர்கள் இழுவைப்படகுகளுடன் அத்துமீறிப் பிரவேசித்து, கடல் வளங்களை எடுத்துச்செல்வதோடு, மன்னார் மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களையும் சேதமாக்கி வருவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவற்றைத் தடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்திலிருந்து காலை 10.45 மணியளவில் மேற்படி கண்டனப் பேரணி ஆரம்பமாகியது.

இந்திய மீனவர்களுக்கும் இலங்கைக் கடற்படையினருக்கும் எதிரான கோஷங்களை எழுப்பியவண்ணம் ஆர்ப்பாட்டம் செய்தவாறு இப் பேரணி நகர்ந்தது.

மன்னார் ஆஸ்பத்திரி வீதியூடாகச் சென்ற இப்பேரணி, மன்னார் அரச செயலகத்தை நண்பகல் அளவில் சென்றடைந்தது.

ஊர்வலத்தின் முடிவில் அரசாங்க அதிபரிடம், இலங்கை, இந்தியப் பிரதமர்கள், தமிழக முதலமைச்சர் ஆகியோருக்கான மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

(க)

## வடக்கு-கிழக்கு ஆசிரியர்களின் ஒரு நாள் வேலைநிறுத்தம் இன்று

(யாழ்ப்பாணம்)
தொண்டராசிரியருக்கு நிரந்தர நியமனம் வழங்குவது உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து அகில இலங்கை தமிழராசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று ஆசிரியர்களின் ஒருநாள் வேலை நிறுத்தம் வடக்கு-கிழக்குப் பகுதியெங்கும் நடைபெறவுள்ளது.

சகல அதிபர்களையும், ஆசிரியர்களையும் இப்போராட்டத்தில் பங்குபற்றுமாறு தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. காலை 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியிலிருந்து ஆசிரியர்களின் பேரணி ஆரம்பமாகவுள்ளது.

## புலிகளின் கப்பலில் இருந்து எம் மீது தாக்குதல் நடந்தது

### இலங்கைக் கடற்படையினர் தெரிவிப்பு

(கொழும்பு)
முல்லைத்தீவுக்குக் கிழக்கே 185 கடல்மைல் தூரத்தில் காணப்பட்ட, சந்தேகத்திற்கு இடமான கப்பலைக் கடற்படையினர் வழிமறித்த போது, அதிலிருந்து கடற்படை மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் ஒரு கடற்படை அதிகாரியும், மூன்று கடற்படையினரும் காயமடைந்தனர். இதைத்தொடர்ந்து அக் கப்பல் மீது பதில் தாக்குதல் நடத்தப்பட்டது என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

மூழ்கடிக்கப்பட்ட கப்பல் 60 மீற்றர் நீளமானது எனவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

## கண்ணீர் அஞ்சலி

ஆருயிர்த்தோழன் அஜீவனின்

பாசமனையாள் **வினோதினி**

இவ்வுலகு நீத்த செய்தி கேட்டு நெஞ்சுடைந்தோம். அன்னாரது ஆத்ம சாந்திக்காய் எல்லோருக்கும் பொதுவான இறைவனை மன்றாடுகின்றோம்.

விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம். (277)

11 ஆம் அணி
மாணவர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பீட 3 ஆம் வருட மாணவனாகிய அஜீவனின்

அன்பு மனைவி

**வினோதினி அஜீவன்**

10.03.2003 இல் அகால மரணமடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாரின் குடும்பத்திற்கு தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இரண்டாம் வருட மாணவர்கள்,
விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(275)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.